# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



ஆனி - 2020

# காற்றுவெளி

## கலை இலக்கிய இதழ்

ஆனி - 2020

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன்,
7904748374

படைப்புகள் அனுப்ப :

R.Mahendran,

34 Redriffe Road, Plaistow, London, e13 0JX, UK

மின்னஞ்சல் :

Mullaiamuthan16@gmail.com

நன்றி : இணையம்

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.


## வணக்கம்,

ஆனிமாத (2020) காற்றுவெளி தங்கள் பார்வைக்கு.

ஈழத்து நூல்கண்காட்சியினை நடத்த எண்ணியபோது நமக்கான ஒரு சிற்றிதழ் தேவையென உணரப்பட்டபோது ஆரம்பித்த காற்றுவெளி இற்றைநாள் வரை தொடர்கிறது.

அவ்வப்போது நினைத்த போது வெளிவரும் இதழ் எனும் அடைமொழியில் வெளிவந்த காற்றுவெளி இலக்க அடிப்படையில் தொடர்ச்சியாக வெளிவந்தால் சிறப்பாக இருக்குமே என கொண்டுவந்தோம்.இடையில் தாம் உதவுவதாக வந்த சில நண்பர்களிடம் கொடுக்கப்பட்ட படைப்புக்களை மீளப் பெற முடியாதபடி அந்த நண்பர்களைத் தேடும் நிலைக்குத் தள்ளப்பட தொடர்ச்சியாக இலக்க அடிப்படையில் கொண்டுவர முடியாமல் போக இடையிடையே தாமதமாக நினைத்த போது வெளிவரும் இதழாயிற்று.பின்னர் மின்னிதழானதும்,அவ்வப்போது அச்சிதழானதும் காற்றுவெளி பயணிக்கிறது. வாசகர்களினதும், படைப்பாளர்களினதும் தொடர்ச்சியான ஆதரவே சாத்தியமாயிற்று.

இடையிடையே இலக்கிய விழாக்களும், ஈழத்து நூல் கண்காட்சிகளும் நடத்த காலம் ஒத்துழைத்தது. இவ்வாண்டும் ஏற்பட்ட அசாதாரண சூழல் எல்லாவற்றையும் புரட்டிவிட்டது.

பலரை இழந்துமாயிற்று. தொடர்ந்து அச்சமான சூழலில் மக்கள் வாழ்கின்ற நிலைமை தொடரவே செய்கிறது.

தொடர்ந்து ரார்த்தனைகளுடனும், நம்பிக்கையுடனும் பயணிப்போம்.

**நட்புடன்,**

**சோபா**

◉ சாந்தக்கண்ணா ,ஒஸ்லோ

# அம்மா என்றால்..

பெருதவப் பயனதுவே பெண்களெனும் பிறப்பு
அதன் அதியுச்ச ஒளியே அன்னையர் எனும்
சிறப்பு

கற்பனைக்கும் எட்டாது
விற்பனைக்கும் கிட்டாது சொப்பனமும்
காட்டாது  தாயன்பின் ஆழத்தை

அணுவுக்குள் அன்பு விதை விதைக்கும் நல்
விவசாயி
தனக்குள்ளே தன் துயரை புதைக்கின்ற போராளி

வேண்டும் வரம் எமக்கு வர
வேள்வித் தீயில் தான் விழுந்து
முந்தானையில் முடிந்து வைத்து
மூச்சுக் காத்தெனவே காத்திடுவாள்

இரத்தத்தைப் பாலாக்கி இரையாக ஊட்டிவிட்டு
தூக்கித்தன் தோளிலிட்டு  துயில் கொள்ளப்
பாட்டிசைப்பாள்

துயர்களைய மடிதந்து
தூக்கி எமை நிறுத்தி இடர்களைந்து நாம் வாழ
தன் வாழ்வும் தான் தருவாள்

கறைபடியாக் கதிராகிக் காலமெல்லாம் ஒளிதந்து
இறையை விட மேலாக இல்லதைக் காத்திடுவாள்

அன்னையின் அன்பிற்கு அகிலத்தில் நிகரில்லை
அடிதொட்டு வணங்குவோர்க்கு என்றுமே
குறைவில்லை

❑

பஞ்சாபி மூலக்கதை : அம்ரிதா பிரீதம்
பஞ்சாபி / ஆங்கிலம் : குஷ்வந்த் சிங்
ஆங்கிலம்/தமிழ் : குகதர்சனி (தமிழ்க்கிழவி)



# மண்ணெண்ணெயின் துர்மணம்

வெளியே குதிரை கனைத்தது. அழைப்பை இனங்கண்டு கொண்ட கலேரி வீட்டுக்கு வெளியே ஓடினாள். குதிரை அவளது பெற்றோரின் கிராமத்தில் இருந்து வந்திருந்தது. அது தான் தன் தந்தையின் வீட்டுக்குச் செல்லும் கதவே போல, அதன் கழுத்தில் தலை சாய்த்தாள் அவள்.

கலேரியின் பெற்றோர் சம்பாவில் வாழ்கின்றார்கள். சம்பா, உயர் நிலத்தில் அமைந்துள்ள அவளது கணவனின் கிராமத்தில் இருந்து சில மைல்கள் தொலைவில் உள்ளது. பாதையானது தாழ் நிலத்தை நோக்கி வளைந்து நெளிந்து இறங்கிச் செல்லும் இந்த இடத்தில் இருந்து பார்த்தால், நீண்ட தூரத்தில் இருக்கும் சம்பா காலடியில் பரந்து விரிந்து கிடப்பது போல் தோன்றும். பிறந்த வீட்டு நினைவு வரும்போதெல்லாம் கலேரி தன் கணவன் மானக்குடன் இந்த இடத்துக்குச் செல்வாள். ஆதவனின் ஒளியில் மின்னுகின்ற சம்பாவின் அகங்களைப் பார்த்திருந்துவிட்டுத் திரும்புவாள். அவள் மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை அறுவடைக்குப் பின்னர் தன் பெற்றோருடன் ஒரு சில நாட்களை கழிக்கக் கலேரி அனுமதிக்கப்படுவாள். அவர்கள் ஒருவனை லகர்மண்டிக்கு அனுப்பி அவளைச் சம்பாவுக்கு அழைத்துக் கொள்வார்கள்.

கலேரியைப் போலவே வெளியே மணம் முடித்துள்ள அவளது இரு நண்பிகளும் அதே நேரத்தில் சம்பாவுக்கு வருவார்கள். பெண்கள் மூவரும் தங்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் அந்த வருடாந்த ஒன்றுகூடலுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பர். ஒன்று சேர்ந்து தெருக்களில் திரிவர். பின்பு, அறுவடைத் திருவிழா வரும். அறுவடைத் திருவிழாவுக்குப் புதிய துணிமணிகள் வாங்குவார்கள். அவர்களது துப்பட்டாக்கள் சாயமூட்டப்பட்டு. கஞ்சி இடப்பட்டு, மைக்கா தூவப்பெற்று மினுமினுக்கும். அவர்கள் கண்ணாடி வளையல்களும் வெள்ளிக் காதணிகளும் வாங்குவார்கள்.

கலேரி எப்போதும் அறுவடைக்கான நாட்களை எண்ணிக் கொண்டே இருப்பாள். இலையுதிர்கால இளந்தென்றல் மழைக்கால மேகங்களைக் கலைக்கும் வரை அவள் வேறு எதையும் சிந்திக்க மாட்டாள். அவளது நாளாந்தக் கடமைகளான, கால்நடைகளுக்குத் தீவனமிடல், கணவனின் பெற்றோருக்கு உணவு தயாரித்தல் ஆகியவற்றை முடித்தபின்னர், உட்கார்ந்து தன் பிறந்தகத்திற்கு அழைத்துச்செல்ல ஒருவர் வர இன்னும் எத்தனை நாட்கள் உள்ளன என்று எண்ணத் தொடங்கி விடுவாள்.

இப்போது, மீண்டும் ஒரு முறை, அவளது வருடாந்த விருந்துக்கான வேளை

வந்துவிட்டது. அவள் குதிரையை மென்மையாக, மகிழ்ச்சியோடு தடவி விட்டு, அவளது தந்தையின் வேலையாள் நாட்டுவை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்து விட்டு, மறுநாள் புறப்படுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டாள். அவளது மகிழ்ச்சியை வார்த்தைகளால் விபரிக்க வேண்டி இருக்கவில்லை. அவளது முகமே அதனை வெளிக்காட்டப் போதுமானதாய் இருந்தது. அவளது கணவன் ஹுக்காவை ஒரு முறை இழுத்து விட்டுக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். அது புகையிலையை விரும்பாமையைப் போலவோ அல்லது மனைவிக்கு முகங் கொடுக்க இயலாமையை போலவோ தோன்றியது.

"சந்தைக் கடைக்காவது சம்பாவுக்கு நீங்கள் வருவீர்களா, இல்லையா? ஒரு நாளைக்காவது வாருங்களேன்..." அவள் இரந்தாள்.

மானக் அவனது சுங்கானை ஒருபுறம் போட்டான். ஆனால் பதில் இறுக்கவில்லை. ஏன் பேச மாட்டேன் என்கிறீர்கள்?" என்றாள் சிறு சினத்துடன் அவள். நோன் உங்களிடம் ஒன்று சொல்லலாமா?"

"நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குத் தெரியும். நீ வருடத்துக்கு ஒருமுறைதான் உன் பெற்றோரிடம் போகிறாய். அத்துடன், இதற்கு முன் ஒருபோதும் நிறுத்தப்பட்டதும் இல்லை..."

"பின் ஏன் இம்முறை மட்டும் என்னை நிறுத்த விரும்புகிறீர்கள்?" அவள் உரிமையோடு கேட்டாள்.

"இம்முறை மட்டும்" அவன் சமாதானப் படுத்தினான்.

"உங்கள் அம்மா ஒன்றுமே சொல்லவில்லை. ஏன் நீங்கள் மட்டும் குறுக்கே நிற்கிறீர்கள்?". கலேரி குழந்தைத்தனமாக முரண்டு பிடித்தாள்.

"என் அம்மா.." மானக் வாக்கியத்தை முடிக்கவில்லை.

நீண்ட நாள் எதிர்பார்த்திருந்த காலைப்பொழுதில், கலேரி உதயத்திற்கு முன்பே தயாராகிவிட்டாள். அவளுக்குக் குழந்தைகள் இல்லாத படியால், அவர்களை விட்டு விட்டுச் செல்வதா, உடன் அழைத்துச் செல்வதா என்ற பிரச்சனையே எழ இடமில்லை. மானக்கின் பெற்றோரிடம் அவள் விடை பெற்றதும் நாட்டு குதிரைக்குச் சேணம் பூட்டினான். அவர்கள் அவளது தலையில் தொட்டு ஆசீர்வதித்தனர்.

"நானும் கொஞ்சம் தூரம் உன்னுடன் வருகிறேன்" என்றான் மானக்.

அவர்கள் புறப்பட்ட போது கலேரி மிக்க மகிழ்ச்சியுடன் இருந்தாள். மானக்கின் புல்லாங்குழலைத் தனது துப்பட்டாவின் கீழ் மறைத்து வைத்தாள்.

ஹாஜியாரின் கிராமத்துக்கு அப்பால் வீதியானது சம்பாவை நோக்கிச் செங்குத்தாய் இறங்கிச் செல்கிறது. அங்கு அவள் புல்லாங்குழலை வெளியே எடுத்து மானக்கிடம் தந்தாள். அவனது கரங்களைத் தன் கரங்களில் ஏந்திய அவள்,

"வாருங்கள்! உங்கள் புல்லாங்குழலை வாசியுங்கள்" என்றாள். ஆனால், சிந்தனையில் ஆழ்ந்திருந்த மானக் அதைக் கவனிக்கவில்லை. ஏரன் நீங்கள் உங்கள் புல்லாங்குழலை வாசிக்கவில்லை?" என்று அவள் நயமாகக் கேட்டாள். அவன் அவளைச் சோகமாகப் பார்த்தான். பின்னர் புல்லாங்குழலைத் தன் அதரங்களில் பொருத்தி இனந்தெரியாத சோக ராகம் ஒன்றை வாசித்தான்.

"கலேரி! போகாதே" என்று அவன் அவளிடம் இரந்தான். "மீண்டும் கேட்கிறேன்; இம்முறை மட்டும் போகாதே!". மேற்கொண்டு தொடர இயலாமல் புல்லாங்குழலை அவளிடம் கையளித்தான்.

"ஆனால் ஏன்?" அவள் கேட்டாள். "சந்தைக் கடையன்று வாருங்கள்; நாமிருவரும் சேர்ந்தே திரும்பலாம்; சத்தியமாய்".

மானக் மீண்டும் கேட்கவில்லை.

அவர்கள் பாதையோரத்தில் நிறுத்தினார்கள். தம்பதியரைத் தனியே விட்டுவிட்டு நாட்டு குதிரையை ஒரு சில அடி முன்னால் கொண்டு சென்றான். மானக்கின் சிந்தனை பின்னோக்கித் தாவியது.

ஏழு வருடங்களுக்கு முன்னர் இதேவேளை அவனும் அவனது நண்பர்களும் இதே வீதி வழியே தான் சம்பாவின் அறுவடைத் திருவிழாவுக்குச் செல்வதற்காக வந்தார்கள். இந்தச் சந்தைக் கடையிலேயே மானக் கலேரியை முதன்முதலில் கண்டான். அவர்கள் தமது இதயங்களை பரிமாறிக் கொண்டார்கள். பின்னர் அவளைத் தனிமையில் சந்தித்து, அவள் கைகளைத் தன் கைகளில் ஏந்தி நீ பால் மிகுந்த முற்றாத சோளத்தை ஒத்தவள்" என்றதை இப்போது நினைவு கூர்ந்தான்.

"மந்தைகள் தான் முற்றாத சோளத்துக்கு அலையும்" கலேரி பதிலிறுத்தாள். தனது கைகளை விடுவித்துக் கொண்டு, "மனிதர்கள் அது பொரிக்கப்படுவதையே விரும்புவர்; உங்களுக்கு நான் வேண்டுமானால் என்னைக் கைப்பிடிக்க என் அப்பாவிடம் போய்க் கேளுங்கள்".

மானக்கின் உற்றார் இடையே திருமணத்துக்கு முன்பே மணப்பெண்ணுக்கான விலையைக் கொடுத்து விடுவது வழக்கமாக இருந்தது. கலேரியின் தந்தை தன்னிடம் இருந்து என்ன விலையை எதிர்பார்ப்பார் என்று அறியாத மானக் அஞ்சினான். ஆனால் கலேரியின் தந்தை செல்வச் செழிப்பு மிக்கவர்; நகரங்களில் வாழ்க்கை நடத்தியவர்; அவர் தன் மகளுக்காகப் பணம் எதுவும் பெற்றுக் கொள்வதில்லை

என்றும், நல்ல குடும்பத்தைச் சேர்ந்த உயர்ந்த ஒழுக்கமுடைய ஒருவனுக்கே மகளைக் கொடுப்பதாகவும் உறுதி பூண்டிருந்தார். தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்த மணமகனாக விரைவிலேயே மானக் தீர்மானிக்கப்பட்டான். மானக்கும் கலேரியும் விரைவில் மணமுடித்தனர்.. நினைவுகளில் ஆழ்ந்து இருந்த மானக் தன் தோளைத் தொட்ட கலேரியின் கைகளால் உசுப்ப பெற்றான்.

"எதைப் பற்றிக் கனவு காண்கிறீர்கள்?". அவள் அவனைப் பரிகாசித்தாள்.

அவன் பதிலிறுக்கவில்லை. குதிரை பொறுமை இழந்து கனைத்தது. கலேரி புறப்படுவதற்காக எழுந்தாள். ஜேிங்கிருந்து இரு மைல்கள் தொலைவில் உள்ள நீல மணிக்காட்டை அறிவீர்கள் தானே?" என்றாள். அதனூடாகச் செல்பவர்கள் எவரேனும் செவிடாவர் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் நிச்சயம் நீலமணிக் காட்டின் ஊடாகச் சென்று இருக்க வேண்டும். நான் சொல்லும் எதையும் நீங்கள் கேட்பதாய்க் காணோம்.

"நீ சொல்வது சரிதான்; சரி நீ சொல்லும் எதையும் என்னால் செவியுற முடியவில்லை" என்று மானக் நெடுமூச்சு உயிர்த்தான்.

அவர்கள், ஒருவர் எண்ணத்தை மற்றவர் புரிந்து கொள்ளாமலேயே, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். நோன் போகிறேன்" என்றாள் கலேரி மென்மையாக. நேீங்கள் திரும்புவது நல்லது; நீங்கள் வீட்டில் இருந்து நெடுந்தூரம் வந்து விட்டீர்கள்".

"நீயும் நீண்ட தூரம் நடந்து விட்டாய்; நீ குதிரையில் ஏறிக் கொள்வது நல்லது" எனப் பதிலளித்தான் மானக்.

"இந்தாருங்கள், உங்கள் புல்லாங்குழல்!"

"அதை நீயே எடுத்துக்கொள்"

"சந்தைக்கடை நாளன்று வந்து இதை வாசிப்பீர்களா?" அவள் புன்னகையுடன் கேட்டாள். அவளது விழிகளில் ஆதவனின் பிரகாசம் தெரிந்தது. மானக் அவனது முகத்தைத் திருப்பிக் கொண்டான். கலேரி குழப்பத்துடன் தோளைக் குலுக்கிக் கொண்டு சம்பா நோக்கி பயணித்தாள். மானக் வீடு திரும்பினான்.

வீட்டினுள் நுழைந்த அவன் ஏதும் செய்யத் திராணியற்றுத் தோற்றுப்போன மனநிலையோடு கட்டிலில் சாய்ந்தான். "நீ போய் வர இவ்வளவு நேரமா?" என்றாள் அவன் தாய் வியப்புடன். "சம்பா வரை போனாயா?"

"சம்பா வரை அல்ல; குன்றின் உச்சி வரை" மானக்கின் குரல் கனத்திருந்தது.

"நீ ஏன் கிழவி போல முணுமுணுக்கிறாய்?" அவன் தாய் கடுமையாகச் சொன்னாள்.

“ஆண்மகனாய் இரு”.

மானக் எதிர்த்துச் சுடச்சுடப் பதிலுரைக்க விரும்பினான். நீங்கள் ஒரு பெண்; ஒரு மாற்றாக நீங்கள் அழுதால் என்ன?” ஆனால், அமைதி காத்தான்.

மானக்கும் கலேரியும் மணமுடித்து ஏழு ஆண்டுகளாகியும் அவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லாததால், மானக்கின் தாய் எட்டாவது வருடத்திலும் இதை இப்படியே விட்டு வைக்கக்கூடாது என்று இரகசியமாய் ஒரு முடிவெடுத்திருந்தாள். இவ்வருடம், அவளது முடிவுக்கு அமைய மானக்கிற்கு இரண்டாவது மனைவியைப் பெற்றுக்கொள்ள ஐந்நூறு ரூபாய்கள் செலுத்தியுள்ளதுடன், மானக் அறிந்தவரையில் புதிய மணமகளை கொண்டு வருவதற்கு கலேரி தன் பிறந்தகத்துக்குச் செல்லும் நாளுக்காகத் தான் காத்திருந்தாள். தாய்க்கும் மரபுக்கும் கட்டுப்பட்டு மானக்கின் உடல் புதிய பெண்ணை ஏற்றுக்கொண்டது. ஆனால் மனமோ அவனுள் மரத்துப் போனது.

ஒரு அதிகாலைப் பொழுதில் அவன் சுங்கான் பிடித்துக் கொண்டிருக்கையில் அவனது பழைய நண்பன் ஒருவன் கடந்து சென்றான். ேடேய் பவானி! இந்த விடிகாலையிலேயே எங்கே போகிறாய்?” பவானி நின்றான். அவனது தோளில் ஒரு சிறு முடிச்சு வைத்திருந்தான். ஒேர் இடமும் இல்லை” என மழுப்பினான். மானக் நீ ஏதோ ஓர் இடத்துக்கோ அல்லது இன்னோர் இடத்துக்கோ தானே போக வேண்டும்?” என்று வியந்தான். கொஞ்சம் புகை பிடிக்கிறாயா?”

பவானி தரையில் அமர்ந்து மானக்கின் கரங்களில் இருந்த சுங்கானை எடுத்துக்கொண்டான். நோன் சந்தைக் கடைக்குச் சம்பாவுக்குப் போகிறேன்” ஈற்றில் சொல்லியே விட்டான். பவானியின் வார்த்தைகள் மானக்கின் இதயத்தை ஊசிபோல் துளைத்தன. இேன்றைக்கா சந்தைக் கடை?” இேதே தினம் தான், வருடா வருடம்ே பதிலுக்குக் கடுகடுப்புடன், ஏேழு வருடங்களுக்கு முன்னர் நாங்கள் ஒரே கூட்டமாய் இருந்தது உனக்கு நினைவில்லையா?” பவானி மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. ஆனால் மற்றவனின் கண்டனத்தைப் புரிந்து கொண்ட மானக் சஞ் சலம் உற்றான். பவானி சுங்கானைப் போட்டுவிட்டுத் தனது முடிச்சை எடுத்தான். அவனது புல்லாங்குழல் முடிச்சின் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. பவானி பார்வையிலிருந்து மறையும் வரை மானக்கின் விழிகள் புல்லாங்குழலின் மீதே நிலைத்திருந்தன.

மறுநாள் காலை மானக் வயலில் நிற்கையில் பவானி திரும்பி வருவதைக் கண்டான். அவன் வேண்டுமென்றே மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவன் பவானியிடம் பேசிச் சந்தைக்கடை பற்றி எதையும் அறிய விரும்பவில்லை. ஆனால், பவானி மறுபுறமாக வந்து எதிரில் அமர்ந்தான். அவன் முகம் சோகம் கப்பி இருண்டு இருந்தது.

“கலேரி இறந்து விட்டாள்” பவானி தாழ்ந்த குரலில் சொன்னான்.

“என்...ன?”

“உனது இரண்டாவது திருமணம் பற்றிக் கேள்வியுற்ற வேளை, தன் உடைகளை மண்ணெய்யில் நனைத்து அவற்றுக்குத் தீயிட்டுக் கொண்டாள்”.

வலியால் ஊமையான மானக்கினால் தனது வாழ்க்கையே எரிந்து முடிந்து விட்டதை உணர்ந்து வெறித்துப் பார்க்க மட்டுமே முடிந்தது.

நாட்கள் நகர்ந்தன. மானக் வயல் வேலைகளைத் தொடர்ந்தான். தனது ஆகாரங்களைக் கொடுக்கப்பட்ட வேளையில் உண்டான். ஆயினும் அவன் நடைப்பிணமாகவே காட்சி அளித்தான்.

முகம் உணர்ச்சி அற்று இருந்தது. கண்களில் வெறுமை நிரம்பி வழிந்தது.

“நான் அவரின் மனைவி இல்லை”, அவனது இரண்டாம் மனைவி புகார் செய்தாள். “நான் அவர் மணமுடிக்க நேர்ந்த யாரோ ஒருத்தி”.

எனினும் அவள் வெகு விரைவில் கருவுற்றாள். மானக்கின் தாய்க்கும் புதிய மருமகளை வெகுவாகப் பிடித்துப் போயிற்று. அவனிடம் அவனது மனைவியின் நிலை பற்றிக் கூறினாள். ஆனால் அவனோ ஏதும் புரியாதது போல் விழித்தான். அவன் விழிகளில் இன்னமும் வெறுமையே நிரம்பி வழிந்தது.

அவனது தாய் அவளது மருமகளை அவள் கணவனின் மனநிலைக்கேற்ப சிலகாலம் அனுசரித்து போகுமாறு ஊக்குவித்தாள். குழந்தை பிறந்ததும் அவனை அவன் தந்தையின் மடியில் போட்டால் மானக் தன்னாலேயே மாறிவிடுவான் என்றாள்.

மானக்கின் மனைவிக்கு உரிய நேரத்தில் ஆண் குழந்தையும் பிறந்தது. அவனது தாய் பேருவகையுடன் பையனைக் குளிப்பாட்டி, நல்ல துணிமணிகளை அணிவித்து, மானக்கின் மாடியில் இட்டாள். மடியில் இருந்த பிஞ்சுக் குழந்தையை உற்றுப் பார்த்தான் மானக். வெகு நேரம் சலனமற்று விழித்தான். பின்னர் திடீரென அவனது வெற்று விழிகள் திகிலால் நிரம்பப்பெற்றன. மானக் அலற ஆரம்பித்தான்.

“அவனைக் கொண்டு போங்கள்”, அவன் ஹிஸ்டீரியா பிடித்தவன் போலக் கிறீச்சிட்டான. “அவனைக் கொண்டு போங்கள், அவனில் மணக்கிறது மண்ணெண்ணெய்..”

❑



மெலிஞ்சிமுத்தன்

# ஸ்..ஓ.

பட்டை, பட்டையாய் கழன்றும் எஞ்சிய நடுப்பட்டைக்கு கண்ணாடி உறையிட்டு, என் காற்சட்டைப் பைக்குள் தொலையாமல் வைத்திருக்கும் 'தேசிய அடையாள அட்டையினை' மிகுந்த விரக்தியோடு நினைவு கூர்கிறேன்.

இது இல்லாத காலத்தில் நான் பல தடவைகள் கடுமையான விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டேன். இதற்கு விண்ணப்பித்து விட்டு மிகுந்த நடுக்கத்தோடு பல மாதங்கள் காத்திருந்தேன். என் பத்தொன்பது வயதில் இது என் கைக்குக் கிட்டியது. இது என் கைக்குக்கிடைத்த காலத்திலிருந்து இதனை நான் பிரியவில்லை. என்னைப் பரிசோதித்த ராணுவத்தினர் பலரின் மாசு நிறைந்த கைகள் இதனைப் பிரட்டி,உருட்டி, வளைத்து என்னிடம் திரும்பித் தந்த பின்னர் நான் ஒருபோதும் எந்தக் கிருமிகொல்லி கொண்டும் இதனைக் கழுவவில்லை.

இப்போதுதான் என் புத்திக்குத் தெரிகிறது இன்றுவரை இது செல்லாத ஒரு பொருளாகவே என்னுடன் இருந்திருக்கிறது. இந்த அடையாள அட்டையில் இருக்கும் என் பத்தொன்பது வயது அப்பாவித்தனமான முகத்தைப் பார்க்கும்போது எனக்கே மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அது மட்டுமில்லாமல் பழைய நினைவுகளெல்லாம் திரும்பவும் வந்து என்னைத் துன்புறுத்துகின்றன. இதன் பின்னர் வந்த எட்டு வருடங்களில் என் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் என் கனவுகளையெல்லாம் எப்படிப் புரட்டிப்போட்டன என்பவற்றை நினைத்துப் பார்க்கின்றேன். எத்தனை மனிதர்களிடமிருந்து நான் தூரமாகியுள்ளேன்... இத்தனை நடந்தபின்னும்....

❑

அவர்கள் என்னை குற்றவாளியாகவே நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களை விட்டு தூரமாகி வந்தபின்னர் என்பக்க நியாயத்தை நான் எத்தனை தடவைகள் சொல்லித்தீர்த்தாலும் அவர்கள் என்னை குற்றவாளியாகப் பார்க்கும் பார்வையை விடுவதாய் இல்லை. நான் மற்றவர்களால் குற்றவாளியாகப் பார்க்கப்படுகிறேன் என்ற விடயம் எனக்கு மிகுந்த உறுத்தலாய் இருக்கிறது.

என்மீது அவர்கள் சுமத்தும் குற்றம் இன்றுவரை நீர்த்துப் போவதாய் இல்லை. அவர்கள் குற்றமென்று கணித்த ஒன்றின்மேல் ஒட்டுவேலைகளைச் செய்து குற்றக்கட்டியாய் வளர்த்துவருகின்றனர். எனக்கும்,இன்னொரு மனிதருக்கும் நடுவில் அந்தக் குற்றக்கட்டி பெரியதொரு மறைப்பாய் வளர்ந்து நிற்கிறது.

அந்த இன்னொரு மனிதர் இன்று மரணித்துவிட்டார் என்ற விடயம் என் ஆன்மாவை வருத்துகிறது. ஏனெனில் அந்த மனிதரை நான் மிகவும் நேசித்தேன், அவரும் என்மீது கணிசமான அளவு அன்பும்,மதிப்பும் வைத்திருந்தார். அதேநேரத்தில் என்னுடன் ஒரளவு தூரத்தை வைத்திருந்தார். அந்தத் தூரம் புத்திசாலித்தனத்தால் ஆனது. அந்தத் தூரம் வரவர அதிகமாகிப்போனதற்குக் காரணம் நான்தான். ஆகவே நானே இப்போது குற்றவாளி.

அந்த மனிதர் நோயுற்றிருப்பதாய் என்னிடம் ஒருவர் சொன்னார். சொன்னவர் ஒருவித நமட்டுச்சிரிப்போடு சொன்னார். அந்தச் சிரிப்பு புதிர்மிக்கதாய் இருந்தது, அந்தப் புதிர் என்னைக் காயப்படுத்தத்தக்கதாய் இருந்தது. அவர் அச்செய்தியைச் சொல்லிவிட்டு என்னிடமிருந்து என்ன பதில் வருகிறது என்று எதிர்பார்த்தார், என் பதிலை வைத்து என்னை விமர்சிக்க அவர் ஆயத்தமாக இருந்தார். ஆதலால் நான் எவ்வித பதிலும் சொல்லவில்லை. 'ஸ்..ஓ..' என்று மட்டும் ஒரு சத்தமிட்டேன். என் துயரத்தின் கனம் புரியாத அந்த மனிதர் கலைந்து போனார்.

சுமார் பத்து வருடங்களின் முன்னர் அந்த மனிதர் முதன்முதலாய் பேசிய வார்த்தைகள் 'தம்பி இண்டைக்கு நடக்கிற விசேசத்தில நீங்களும் முன்னுக்கு நிற்க வேண்டிய ஒரு ஆள். ஆனால் உங்களைக் கூப்பிட முடியாத நிலையில இண்டைக்கு நான் இருக்கிறன்' என்பவைதான்

அவருடைய குரலும்,அந்த வார்த்தைகளிலிருந்த அன்பும் உரிமையும் இன்றுவரை எனது நெஞ்சில் பதிவாகி பத்திரமாகவே இருக்கின்றது. ஆனால் கடைசிவரைக்கும் அவருடைய வீட்டுக்கு என்னால் போக முடியவில்லை.

அவர் நோயுற்று இருந்தபோது அவரைப்பற்றி விசாரிக்க அவருடைய உறவினர்களுடன் பேச முயன்றும் தோற்றுப்போனேன். அவர்களுடைய

உறவினர்கள் யாரும் என்னை மதிக்கவில்லை,அல்லது பொருட்படுத்தவில்லை. அவருக்கும் என்னுடன் பேசவேண்டுமென்று புத்தியில் தோன்றியிருக்கலாம், நாங்கள்தான் புத்திசாலிகள் என்ற வேடம் போட்டவர்களாயிற்றே. ம்.... அவர் இன்று வாழ்க்கைக்குள் இல்லை.

தடித்த குரல்,பலமான உடற்கட்டு,நெஞ்சை நிமிர்த்திய நடை, சீரான பார்வை,நேரத்தை மதித்தல், திட்டமிடும் திறன் என்று அந்த மனிதரின் சில குண இயல்புகளைச் சொல்லலாம். ஆனால் அவருக்கு முற்றிலும் எதிர் நிலையில் இருப்பவன் நான். எங்கள் இருவருக்கும் நடுவில் இருந்தது அன்பும்,மதிப்பும் மட்டும்தான். அவைதான் எங்கள் உறவின் ஆதாரமாய் இருந்தன... அவர் இன்று இறந்துபோனார்.

❑

முன்னொருகாலத்தில் அவருடைய மகனுக்கும் எனக்கும் ஒரு ஒவ்வாமை வந்திருந்தது, வாக்குவாதப்பட்டு இருவருமே விலகிப்போயிருந்தோம். பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில்கூட அவனுடைய உடலை உறுதிப்படுத்தமுடியாமற்போனான் என்பதற்குப்பின்னால் நான் காரணமாக இருந்திருக்கலாமோ எனும் சந்தேகம் பலருக்குத் தோன்றியிருக்கலாம்.

ஆனால் அப்போதெல்லாம் அவர் என்னையும் ஒரு மகனாகவே அரவணைத்தார். ஏனெனில் தன் மகன் என்னுடன் மிக மோசமாய் நடந்துகொண்டானென்றும், அவன் என்னைப் புரிந்துகொண்டிருந்தால் என் நேச நண்பனாகியிருப்பானென்றும் அவர் சொன்னார். அவனுடைய மரணத்தில் நானும் மிகுந்த மனத்துயர் அடைந்தேன். பலர் என் முதுகின் பின்னால் கதைத்தார்கள். அவர்களின் கதைகள் பலரின் முதுகுகளின் பின்னால் பயணித்து என் முன்னே வந்து நின்றபோது இச்சமூகத்தின் மீதே வெறுப்பு வந்தது. அப்போதெல்லாம் 'நானிருக்கிறேன் ஒன்றுக்கும் யோசியாதைங்கோ' என்பார். அவரும் இன்று இறந்துபோனார்.

சில மாதங்களின் முன் அவருடைய மருமகனைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டது. எனக்கு அவரை அறிமுகப்படுத்தியவர் 'இன்னாரின் மருமகன்' என்றே அறிமுகப்படுத்தியிருந்தார் ஆனால் அவரின் மருமகன் என்னைக் கேள்விப்பட்டே இருக்கவில்லை என்பதுபோல நடந்துகொண்டார். ஆனால் அவர் எவ்வளவு முயன்றும் பதட்டம் கலந்ததொரு இறுக்கத்தனமாய் அவருடைய முகம் இருந்தது. அவருடைய ஒரு மகனுக்கு என்னுடைய புனைபெயர் வைக்கப் பட்டிருந்ததை அறிந்தபோது அப்பெயர் யாரால்? எவ்விதமான மன நிலையோடு வைக்கப்பட்டது என்பதைக் கேட்டறிய எனக்குத் தென்பில்லை. அது என்னுடைய புனை பெயர்தான் என்பதையும் வெளியுலகம் அறிந்திருக்கவில்லை.

❑

நான் ஒரு சமூகச்செயற்பாட்டாளனாய் அயர்ச்சிக்கு உள்ளாகிப்போனேன். தோல்வி மனப்பான்மையும், ஏமாற்றமும் என்னை இந்தச் சமூகத்திடமிருந்து ஒதுங்கச் செய்தது. அவர் மரணிக்கும் முன்னர் அவரை நான் காணவேண்டும் எனும் ஆவலும் அதிகரித்தது. யுத்தம் முடிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது என்பதாலும், என் மனப் பயங்கள் கொஞ்சம் தணிந்திருந்ததாலும் எனது ஆர்வம் அதிகரித்தது. எனது நாட்டில் எனக்கான சொந்தங்கள் யாருமே இல்லாமல் போய்விட்டார்கள் என்றபோதும் அவரைக் காணவேண்டும் எனும் ஆர்வத்தால் உந்தப்பட்டு ஊருக்குப் புறப்பட்டேன்.

ஊருக்கு வந்தபோதுதான் என்னை மறக்காத ஜீவன்கள் இன்னமும் எனது நாட்டில் வாழ்ந்துவருகிறார்கள் என்ற உண்மை உறைத்தது. நான் விமான நிலையத்தில் வைத்தே இனங்காணப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டேன். ஒவ்வொரு கணமும் நரகத்தில் இருப்பதாய். உணர்ந்தேன். என்னை வெளியே எடுக்க யாரேனும் வரமாட்டார்களா என்று ஏங்கினேன். முன்னரும் ஒருமுறை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது இவ்வாறுதான் ஏங்கியிருந்தேன். ஆனால் வெளியே சென்றபின் வாழ்க்கைக்குள் இருந்த பராக்குகளில் கலந்துபோனேன். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்ற விடயம் கூட சொல்லளவில்தான் என்னிடம் இருந்ததே தவிர அது செயல் வடிவம் பெறவில்லை.

நான் மறந்துபோன விசயங்களைக்கூட என்னிடம் விசாரித்தார்கள். எங்கள் இனத்தை மோசமான முறையில் அழிவுக்கு உள்ளாக்கிய பின்னரும் அவர்களிடம் மீண்டும் நாங்கள் தலைநிமிர்ந்துவிடக்கூடாதெனும் அச்சம் சூடேறிக்கொண்டிருந்தது. அவர்கள் என்னை மிகக் கொடூரமாய் வதைத்தார்கள், என்னை அவமானப் படுத்துவதன் மூலம் தங்கள் மனித மாண்புகளை இழந்தார்கள். என் தலையில் ஒரு மரக்கட்டையால் அடித்தபோது என் உயிர் பிரிந்தது. எந்த அதிர்ச்சியோ,அச்சமோ இல்லாமலே என் உடலையும் கொண்டு சென்று புதைத்தார்கள். ஏனெனில் எனது நாட்டில் காணாமற் போனவர்களின் பட்டியல் எப்பொழுதுமே அரைகுறையாகவே இருக்கிறது என்ற உண்மை அவர்களுக்கு நன்றாகவே தெரியும். காணாமல் போனவர்களைக் கண்டடையும் குழுவையும் அவர்களே அமைத்தார்கள்.

இதுவரை வெளிவந்த காணாமலாக்கப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறாத என்னையும் மனதில் இருத்திக்கொண்டு உங்கள் அரசியலை முன்னெடுங்கள் மக்களே.

நான் இப்போது எனது நாட்டில்தான் சுற்றித்திரிகிறேன்.

முடிந்தது.

❑

# பேரன்பு இயக்கம்

◉ ஈழபாரதி

பாலைவனம் போன்றதொரு வறண்ட
பூமனதில்
சோலைவனம் ஆகிட அன்பிணைவை யாசித்தேன்
நீயோ இரும்பு வேலியை திரையிட்டு
மறுத்துவிட்டாய்
என்னிதயம் கந்தக அமிலத்தில் நனைந்த்து
போல் கன்ன்றுவிட்டது
தாயை பிரிந்த்தொரு சேயைப் போல
உன் ஸ்பரிசமற்றிருப்பது
நோம் என் நெஞ்சே
உன் ஒரு சொல் கேளாத
இந்த அமிலநாட்களை
எப்படி கடப்பேன்
நீயென்பது
என் வாழ்வை உயிர்ப்பிக்கும்
பேரன்பு இயக்கம்
என் ஒவ்வொரு நினைவு துளியிலும்
நீ மட்டுமே நிரம்பியிருக்கிறாய்
உன்னைத் தவிர வேறொருவரும் இல்லாத
பொழுதுகள் வாய்க்கப் பெற்றவள் இவள்
உன்னைப் போல் அல்லாமல்



❑

◉ விக்கி நவரட்ணம் (சுவிஸ்)



# உறங்காத அவள் நினைவுகள்

என்னை கடந்து போகும் ஒவ்வொரு நிடமும் நரகத்தில் வாழ்வது பான்ற உணர்வில் மிதக்கிறேன். வாழ்வில் இன்பமில்லா எதிலுமே பிடிப்பில்லாத விசனமுற்ற வாழ்வுக்குள் தவிக்கின்ற பொழுதுகள் தான் தொடர்கின்றன.

கனடா ஒன்ராறியோவிலிருக்கும் ஒன்றிரண்டு நண்பர்களுடன் கொஞ்ச

நேரமாவது பொழுதை போக்க முடியாத இந்த வாழ்வில், இப்போதே மரித்துவிட வேண்டுமென்பதாய் மனசு கிடந்து அலைகிறது. துன்பத்தை சுமக்கும் ஒவ்வொரு இரவும் முட்களின் மேல் படுத்திருப்பது போன்றே படுக்கையும் குத்துகின்றது.

ஒவ்வொரு இரவும் தூக்கத்தை தொலைத்து தவிக்கும் பொழுதெல்லாம் எனக்குள் கடந்துபோன அன்றைய நினைவுகள் மனசுக்குள் கசிகிறது.

யாழ் பல்கலைகழகத்தில் பொருளியல் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த காலமது. அப்பப்போ சனி ஞாயிறு லீவு நாட்களில் அந்த பனைவடலிக்கருகில் உயர்ந்து பரந்து விழுதெறிந்து வளர்ந்திருந்த ஆலமரத்தின் கீழ் நண்பர்களோடு அரட்டையடித்தும், தம்மடித்தும் மகிழ்ந்திருந்த அந்த அலாதி சுகத்தை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். தாளாத வலிகளோடு நெஞ்சம் கனக்கிறது. அந்த மரநிழலில் நேரம்போவதே தெரியாமல் ஒருவரையொருவர் கலாய்த்து நீண்டநேரம் உட்கார்ந்திருப்போம். மாலைநேரம் வந்தாலும் அந்த இடத்தைவிட்டு நகரமனமின்றி மனதிற்கு பிடித்த எதிர்கால விடயங்களைப்பற்றி பேசுவோம்.

வங்கியொன்றில் உதவி மேலாளராக வேலை செய்து வந்த பற்றிக் தன் மாமன் மகள் லஸ்லியாவை பற்றி எந்நேரமும் கதைப்பான். தன்மீது உயிரையே வைத்திருக்கும் அவளைத்தான் திருமணம் செய்யப்போவதாக கூறுவான். ஂபினாஸ் இன்சூரன்ஸ்ஃ நிறுவனமொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த பாமுவின் கனவெல்லாம் தான் வெளிநாடு போகவேண்டும் என்ற ஆசை. சுவிஸில் அவனுடைய அண்ணன் இருப்பதால் அவனது எண்ணம் நியாயமானதாக இருந்தது. சுமந்திரனுக்கு வேலை கிடைத்தால் உடனே ஂவீடியோ கமராவொன்றுஃ வேண்டவேண்டும் என்பது மட்டுமல்ல, நாட்டு நிலமைகளில் குடும்பங்கள் படும் அவஸ்தைகளை பற்றி குறும்படமாக எடுக்கவேண்;டும் என்பது தான் அவனது ஆசையாக இருந்தது. ஆனால் நவிகரன் மட்டும் எப்போதும் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பான். அவனுக்கு தனது தந்தையின் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் இருப்பது மட்டுமல்ல, ஒரேயொரு மகன் என்பதாலும் அவன் வேலை தேடவேண்டுமென்ற அவசியமில்லை .

கொஞ்ச நாட்களில் கூட்டைவிட்டு பறவைகள் பறந்தது போல் ஒவ்வொருவராக கண்காணாத இடங்களிற்கு பறந்துபோனோம். நானும் ஒன்ராறியோவிற்கு வந்து பதினைந்து வருடங்களாகிவிட்டது.

எங்கள் ஊருக்குள் இராணுவம் புதியதாக புதிய இராணுவ நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்திற்காக நாங்கள் பொழுதுபோக்கிய இடமான பனைவடலிக்குள் நின்ற பனைமரங்களை தறித்து இராணுவ நிலைய கட்டுமான பணிகளை ஆரம்பித்தார்கள்.

இந்த காலகட்டத்தில் மன்னாரிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த ஓர் குடும்பம் எங்கள் வீட்டிற்கு நேரெதிரே இருந்த வீட்டில் வாடகைக்கு குடியேறினார்கள். புது இடமாகியதால் அயலவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள தயங்கியபோது, எனது அம்மாதான் அவர்களோடு தொடர்பை ஏற்படுத்தி அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்தாள்.

குடியிருக்;க வந்திருப்பவரின் பெயர் கமலேஸ்வரன். மன்னாரில் மாவட்ட செயலாளராக பணியாற்றியவர். அவருடைய மகளுக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பிற்கான அனுமதி கிடைத்ததால் இடமாற்றம் பெற்றுக்கொண்டு வந்தவராம். அவருடைய மனைவி தமிழ் ஆசிரியை. மகளுடைய படிப்பிற்காக இருவரும் இடமாற்றம் பெற்றுக்கொண்டு இங்கு வந்து குடியேறியிருக்கிறார்கள் என்பதை அம்மா அப்பாவிடம் கூறியது என் காதில் விழுந்தது.

நித்தியா பல்கலைகழகத்திற்கு தந்தையின் வாகனத்தில் செல்வாள். மாலையிலும் அவர்தான் வந்து கூட்டிச்செல்வதுண்டு. ஓர்நாள் பல்கலைக்கழக வழாகத்திற்குள் அவளை நேருக்கு நேர் முதன் முதலாக சந்தித்தேன். அந்த சந்திப்பில் அவள் எழிலுருவம் எனது வாலிப உள்ளத்துள் வாழ்வில் இதுவரை அனுபவிக்காததோர் உணர்வை தந்தது. அவள் பால் வடியும் பூமுகம் செந்தாமரையாக சிவக்க வெட்கம் கவ்விய நிலையில் தடுமாறினாள். விழியுளியால் நான் அவளை செதுக்கியபோது, அவளின் தூரிகை இமை அசைவுக்குள் விழிகள் புரளும் நொடியில் மொழிகள் இல்லா பாசையால் இருவரும் பேசினோம். இதயங்கள் பரிமாற்றமாகி காதலாக மலர்ந்ததே தவிர இருவரும் பேசிக்கொண்டதில்லை.

அன்று பல்கலைக்கழகம் முடிந்த நேரம் பயங்கர இடி மின்னலுடன், பேய்காற்றுமாக மழை ஆரம்பமானது. மழையோ குறைவதாக இல்லை. தாமதித்தால் பேருந்து கிடைக்காது என்பதால் நனைந்தபடியே பேருந்து தரிப்பிடத்திற்கு சென்றேன்.

வழமையாக நித்தியாவை பல்கலைக்கழக வாசலில் வைத்தே அவளது தந்தை ஏற்றி செல்வார். அன்று மழையாக இருந்ததால் நித்தியா பேருந்து தரிப்பிடத்தில் ஒதுங்கி நின்றாள். ஒவ்வொரு பேருந்துகளிலும் நிரம்பிய மாணவர்களோடு பேருந்துகள் நகர்ந்து கொண்டிருந்தன. அந்த பேருந்து தரிப்பிடத்தில் நானும் நித்தியாவும் தனியாக நின்றோம். நித்தியா என்னை பார்த்தாள். நான் நிற்பதால் பயம் நீங்கியவளாக நீண்ட பெமூச்சு விடுவதை என்னால் உணர்ந்து கொள்ளக்கூடிதாக இருந்தது. ‘உங்கடை அப்பா இண்டைக்கு ஏன்? இவ்வளவு நேரமாக வரவில்லை!’ முதன் முதலாக அவளோடு பேசிய வார்த்தையாதலால், அவள் தயக்கத்துடன் ‘ஒருவேளை ஏதாவது அவசர வேலை காரணமாக நேரமாகுதோ தெரியேல்லை’

என்று பதிலளித்தவள் தந்தையின் வாகனம்; வருகிறதா? என்று அவர் வரும் வழியை ஏக்கத்துடன் பார்த்தாள்.

"நித்தியா பயப்படவேண்டாம், நான் நிற்கிறேன் தானே!" "அதில்லை நேரமும் போச்சுது அப்பாவையும் காணவில்லை அதுதான் பயமாக இருக்கு" என்று கூறிய அவளின் விழிகளில் பயம் குடியிருப்பதை பார்த்தேன். அவளுடைய பயம் நியாயமானதே. மாலை ஆறுமணிக்கு பின்னர் தொடர் ஊரடங்கு சட்டம் இருந்த காலமது. "பயப்படதே நித்தியா உங்கடை அப்பா வரும் வரைக்கும் நான் நிற்கிறேன்" என்று கூறிக்கொண்டிருக்கும் போதே பேருந்து தரிப்பிடத்திற்;கருகில் தேங்கி நன்ற மழைநீரை இருபுறமும் வாரியிறைத்தபடி தரிப்பிடத்தில் அவளுடைய தந்தையின் வாகனம் வந்து நின்றது. நித்தியா வாகனத்துள் ஏறியமர்ந்தாள். அவளுடைய தந்தை சிறிது வாகனக் கண்ணாடியை கீழே நகர்த்தியபடி "தம்பி வீட்டை தானே போறீங்கள்? பிறகேன் நிக்கிறீங்கள் ஏறுங்கோவன்" அவருடைய அன்புக்கு கட்டுப்பட்ட நான் ஏறியமர்ந்தேன்.

நிம்மதியற்ற ஒவ்வோரு இரவுகளிலும் யாருமே அறியமுடியாத என் ஐறிவனுக்குள் நித்தியாவின் நினைவுகள் மட்டுமே வந்து போகும். என் மனதிற்கு பிடித்தவளுடன் மகிழ்ச்சியாக மனம்விட்டு பேசமுடியாத ஒவ்வொரு தினமும் நகர்வதை நினைத்தால் இப்போதே மரித்துவிடவேண்டுமென்று மனமோ அழுது தொலைக்கிறது. நித்தியாவின் நினைவுகளோடு நீண்டு செல்லும் நாட்களை நினைத்தால் என்னுள்ளம் சிலுவை சுமக்கும் பயணமாக கனத்து மாய்கிறது.

அன்று வெள்ளிக்கிழமை போயா விடுமுறை நாள். அம்மாவிடம் ஏதோ கொடுப்பதற்காக நித்தியா கையில் சிறிய பார்சலுடன் வீட்டிற்கு வந்தாள். அம்மா வீட்டில் இல்லையென்பதை தெரிந்து கொண்டு திரும்பி போக எத்தனித்தாள். அவளை கவனித்த நான் என்ன வேண்டும் நித்தியா? என்ற எனது கேள்வியை அவள் சற்றும் எதிர்பாராததால் திடுக்கிட்டு திரும்பி தன்னை சுதாகரித்துக்கொண்டு "அம்மா இட்டலி கொஞ்சம் அன்ரிட்டை கொடுக்க சொல்லி தந்தவா" என்று பதிலளித்தாள்.

அருகிலுள்ள வீட்டிற்கு அம்மா சென்றதால் அவளிடம் இருந்த இட்டலி பார்சலை பெற்றுக்கொண்ட பின்னர் முதன் முதலாக இருவரும் மனம்திறந்து கதைத்துக் கொண்டிருந்தபோது அம்மா வந்தாள். நித்தியாவிடம் சுகத்தை கேட்டபடி வந்தவள் "என்ன வேணும் நித்தியா?" "அம்மா இட்டலி கொஞ்சம் தந்தவா அதுதான் உங்களிட்டை கொடுத்திட்டு போக வந்தனான்." என்று கூறிக்கொண்டே அம்மாவிடம் போயிற்று வாறேன் அன்ரி என்று கூறியபடியே கண்களால் என்னிடம் விடைபெற்றாள்.

அவள் போனதும் என்னருகில் வந்த அம்மா “என்னடா கௌதம் இரண்டு பேரும் ரகசியமாக கதைக்கிறியள். என்ன ஒருவரையொருவர் விரும்புறியள் போல இருக்கு?”

“அப்படியொன்றும் இல்லையம்மா வந்த இடத்தில் நீங்களும் இல்லையென்றபடியால் சும்மா கதைத்தனாங்கள்” என்ற பதிலை தயக்கத்துடன் கூறினேன்.

“டேய் எனக்கு கதைவிடுறியா? முதலில் உனது படிப்பைப்பார். நித்தியாவும் படித்து முடிந்ததும் உன் விருப்பத்தை நர்த்தி செய்கிறேன்” என்று கூறியபடியே சமையலறைக்குள் சென்றாள். அம்மா எங்கள் இருவரின் காதலையும் அங்கீகரித்தது மனதிற்கு சந்தோசமாக இருந்தது.

ஆனால் அதுதான் நாமிருவரும் சந்தித்து பேசிய இறுதி நாளாக இருக்குமென்று இருவருக்கும் புரியவி;ல்லை.

அன்று சனிக்கிழமை நித்தியாவின் அம்மாவுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணத்தால் நித்தியா அவரை அழைத்துக்கொண்டு“கிளினிக்” ஒன்றிற்கு அழைத்து சென்ற பின்னர் வீட்டிற்கு வருவதற்காக பேருந்து நிலையத்தில் பேருந்திற்காக காத்து நின்றிபோது அந்த வழியால் வந்த இராணுவத்தினர் வாகனத்தை நிறுத்தி இருவரையும் விசாரித்த பின்னர் நித்தியாவை இயக்க பெண்ணென்ற சந்தேகத்தில் வலுக்கட்டாயமாக வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றதை அவளுடைய அம்மா வீட்டிற்கு வந்து குழறி அழுததை கேட்டதால் என்ன நடந்தது என்பதையறிய என்னுடைய அம்மா போனவள் திரும்ப வந்து கண்ணீரோடு என்னிடம் நடந்ததை கூறி அழுதாள்.

நித்தியாவின் தந்தையும் அரச அலுவலாக கொழும்பிற்கு சென்றதால் அவருடன் தொடர்புகொள்ள முடியாததால் என்ன செய்வதென்று தெரியாமல் முகாமை நோக்கி ஓடினேன். பதில் தரமறுத்தார்கள். எங்கெங்கு போய் புகார் செய்யமுடியுமோ அங்கெல்லாம் சென்றேன். மாலை ஆறுமணிக்கு பின்பு எங்கும் செல்ல முடியாதென்பதால் வீட்டிற்கு வந்து தணல்மேல் புழுவாக துடித்தேன்.

நிம்மதியற்ற ஒவ்வொரு நிமிடமும் எவருக்கும் புரியாமல் தனிமையில் என் இறிவன் கதறுகிறது. அந்த இருள் சூழ்ந்த நடுநிசியில் ஓவென்ற இரைச்சலுடன் வீசும் காற்று பனைமர ஓலைகளில் பட்டு சரசரக்கின்றது. ஐயோ என் நித்தியா இந்நேரம் இராணுவத்தினரிடம் என்ன பாடுபடுகிறாளோ? பாவிகளை இந்தக் காற்று கொடும் புயலாக மாறி முகாமையே அழிக்காதா? என்று என் மனம் ஏங்கியது.

நிம்மதியில்லாமல் அங்குமிங்கும் நடந்தவாறு யாருக்கு என்ன பாவம் செய்தேன்.

எனக்கு ஏன்? இந்த நிலமை வரவேண்டுமென்ற நினைவோடு, அவளுக்கு ஏதாவது விபரீதம் நேர்ந்து விட்டால் ஐயோ! அதை நினைத்து பார்க்ககூட என்னால் முடியவில்லையே? மனம் குமுறியது!

ஆயிரம் தேள்கள் ஒன்றுசேரக் கொட்டியது போன்றதொரு வேதனையில் இதயம் கதறிக்கொண்டிருந்தது. அந்த இரவு நீண்ட நெடிய யுகமாக நீடித்துக் கொண்டிருப்பது போன்றதொரு உணர்வு தான் ஏற்பட்டது. எப்போதடா விடியும் என்று ஏங்கிய மனதுக்கு ஒருவழியாக விடிந்தபோது வாசல் கதவை திறந்துகொண்டு பாமுவுடன், சுமந்திரனும், பற்றிக்கும் உள்ளே வந்தவர்கள் என் நிலமையைப் பார்த்து எனக்கு ஆறுதல் கூறினார்கள்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் ஐயோ! குறுக்காலை போனவங்கள் என்ரை பிள்ளையை கொன்றுபோட்டாங்களே என்று நித்தியாவின் அம்மா கதறியழும் சத்தம் கேட்டு வீட்டு வாசலுக்கு வந்தபோது, இரவு முழுவதும் நித்தியா வீட்டிலிருந்த அம்மா வந்து அவளுடைய உடல் கடற்கரை மீன் சந்தைக்கு பக்கத்தில் கிடக்காம் கௌதம் என்று கூறி கதறியழுதாள்.

அம்மா கூறியதை கேட்டதும் கீழுதட்டை அழுத்திக் கடித்தபடி முதுகு குலுங்க விம்மினேன்.

நித்தியாவின் தந்தையும் கொழும்பிலிருந்து இரண்டாம் நாள்; வந்த பின்னர் டாக்டர்களின் பரிசோனை முடிந்து உடலை வீட்டிற்கு கொண்டு வந்தார்கள். பலரின் வல்லுறவினால் ஏற்பட்ட மூச்சுத்திணறலினால் உயிரிழப்பு ஏற்பட்டது என்பது டாக்டர்களின் அறிக்கை.

அவள் உடலை பார்க்க நான் மறுத்து விட்டேன். நண்பர்களுடன், அம்மாவும், அப்பாவும் என்னை வற்புறுத்தினார்கள். நித்தியா உயிரோடு என்னுள்ளத்தில் இருக்கிறாள் என்ற நினைவோடு வாழ்வேன். இந்த கோலத்தில் அவளை பார்த்தால் வாழ்நாள் முழுக்க மரண வேதனைதான் என்னை சுற்றியிருக்கும் என்று கூறி இறுதி அஞ்சலி செலுத்த மயானத்திற்கும் செல்ல மறுத்து விட்டேன்.

நித்தியா என்னைப் பிரிந்து ஒரு மாதமாகிவிட்டது. நிம்மதியற்ற வாழ்வுக்குள் நிர்மூலாய்ப்போன இதயத்துடன் இந்த பூமிக்கு பாரமாக வாழ்கிறேனே என்ற எண்ணமே என் இதயத்துள் தேங்கி நின்றது. அன்றும் அவள் நினைவோடு படுக்கையில் கிடந்தேன். பன்னிரண்டு மணி அந்தகார நேரம் யன்னலோரம் ஓர் உருவம் கௌதம் என்று அழைத்தது. எழுந்து யன்னலருகே சென்றபோது நவிகரன் தான் வெளியே நின்றான். 'என்னடா? இந்த நேரத்தில் எப்படியடா உள்ளே வந்தனி

உன்னை சந்திப்பதற்காக மதிலாலை ஏறி விழுந்து வந்தனான். கொஞ்சநேரம் உன்னோடு தங்கியிருந்து விடிவதற்கு முன்னர் போய்விடுவேன் கதவை திறவடா'' என்றான். கதவை சத்தமில்லாமல் மெதுவாக திறந்து அவனை உள்ளே அழைத்தேன். ஏறக்குறைய ஒன்பது மாதங்களிற்கு பின்னர் உருண்டு திரண்ட தேகத்துடன் அவனைப் பார்த்தேன். நித்தியாவைப் பற்றியும், அவள் இறந்ததையும் கேள்விப்பட்டனான் என்று எனக்கு ஆறுதல் கூறி கதைத்துக்கொண்டிருந்தவன் வந்த களைப்பில் அப்படியே உறங்கிவிட்டான்.

சற்று கண்ணுறங்கிய நான் திடுக்கிட்டு எழுந்து பார்த்தபோது நவினை காணவில்லை. அதிகாலை மூன்று மணியிருக்கும் ஏற்கனவே கூறியதுபோல் அவன் எழும்பி போய்விட்டான் என்று நினைத்து வெளிக்கதவை பூட்டிவிட்டு வந்து படுக்கையில் சரிந்தபோது, தூரத்தே பயங்கர குண்டுவெடிப்பு சத்தம் கேட்டது. இராணுவ முகாம்தான் எரிவதுபோல் தெரிந்தது. அந்த நேரத்தில் வெளியில் சென்று விசாரிக்க கூடியதாகவா நாட்டு நிலமையிருந்தது? அம்மாவுடன் அப்பாவும்; சத்தம் கேட்டு எழுந்து வந்து முகாம் எரிந்து வெளிச்சம் வரும் இடத்தை முற்றத்தில் நின்று பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

விடிந்த பின்புதான் தெரிந்தது தற்கொலை குண்டுதாரியால் முகாம் நிர்மூலமாக்கப்பட்டதென்று. என் நித்தியாவை பிணமாக்கியவர்கள் கூண்டோடு இறந்தார்கள் என்பது மனதுக்கு சந்தோசமாக இருந்தது. வேறு இராணுவ முகாம்களிலிருந்து வந்த இராணுவ வாகனங்கள் பரபரப்பாக ஓடித்திரிந்ததால் எவருமே வீதிக்கு போகமுடியாமல் வீட்டிற்குள் முடங்கினார்கள்.

இரண்டு நாட்களின் பின்னர் நவிகரன் தான் தற்கொலை குண்டுதாரியாக சென்று முகாமை அழித்தவன் என்ற விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ அறிவிப்பால் அறிந்துகொள்ள முடிந்தது.

இதன் பின்னர் நவிகரனின் நண்பர்களான எங்களை இராணுவம் தேடத்தொடங்கியதும் ஒவ்வொருவராக நாட்டை விட்டு வெளிநாட்டிற்கு வந்தோம்.

ஒன்ராறியோவிற்கு வந்து பதினைந்து வருடங்களானாலும், இப்போதும் ஓர் ஜடமாகத்தான் நான் வாழ்கிறேன். நிலையற்ற இந்த வாழ்வில் என் நித்தியாவுடன் நிலையாக சில காலமாவது வாழ கொடுத்து வைக்காத எனக்கு எதிலுமே லயிப்பற்ற நிலையில் உறங்காத அவள் நினைவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

யாவும் கற்பனை

❑

◉ கோகிலவாணி தேவராஜா




# மாயக்குதிரை - ஒரு மனப்பதிவு

வெகுநாட்களாக வாசிக்க விரும்பியிருந்த, மேற்படி சிறுகதைத் தொகுப்பை அண்மையிலேயே *amazon kindle* இல் வாசிக்க முடிந்தது. காலத்திற்கேற்ற, கருத்துச்செறிவுமிக்க கதைகளைத் தமிழ்நதி அவர்களின் ஆற்றொழுக்கான அழகிய தமிழ்நடையில் வாசிக்கும் போதே, மாயக்குதிரை காலக் குதிரையைக் கையகப்படுத்திச் சிறப்புகளும், விருதுகளும் பெற்றதொன்றும் வியப்பாகத் தோன்றவில்லை.

போர் தின்றவாழ்வையும், அது தந்த ஆறாத ரணங்களையும் வடுக்களையும் பலநூறு கதைகளில் பார்த்திருந்தும் மாயக்குதிரையில் வரும் மனக்கோலம், மலைகள் இடம் பெயர்ந்து செல்வதில்லை, காத்திருப்பு என மூன்று கதைகளும் உணர்வுகளை முறுக்கி, உயிர்வலி தந்தன. அதுவும் 'சிதம்பரம் ஆச்சி' பாத்திரம் சோகம் இழையோடும் அருமைப்படைப்பு. "அவருடைய விழிகளில் வேதனையின் பிரளயம். உடலில் கூச்சத்தின் குறுகல். ஆச்சி அழுததை அன்றுதான் முதன்முதற் கண்டேன்." வரிகளிற்கண்கள் மூழ்க, மனம் துயரில் மூழ்கிறது.

அமானுடம் கூறுவன கூட அவற்றின் கதைப் புலங்களும், கதைமாந்தரும் மட்டடுமன்றி, அழகிய வர்ணனைகள், மனதோடு இழையும் மொழிநடை,கதைகூறும்பாங்கு என்பவற்றால் மெருகேறி மிளிர்கின்றன.

“நித்திலாவின் புத்தகங்கள்”, ‘மாயக்குதிரை’, இவ்விரண்டும் தனிமனிதநடத்தை தொடர்பானவை. ஏதோ ஒன்றில் இயல்பாகவோ அன்றேல் பழக்கத்தினாலோ மூழ்கித் தம்மியல்பிழந்து, வாசகரைப் பரிதாபமடைய அல்லது கோபமுறவைக்கும் வெவ்வேறு தளத்தில் படைக்கப்பட்ட இருவேறு பெண்கள். அதுவும் கசினோ என்னும் சூதாட்டத்திற்கடிமையாகி, கசினோ மெசினை விட்டு அகலவும் முடியாது, தரிக்கவும் முடியாது, பரிதவித்து, மருட்டும் மாயக்குதிரையின் பின்னோடும் புலம்பெயர் தமிழ்ப்பெண் பாத்திரவார்ப்பு, அபாரம். “சூதின் பேரின்பம் அறியாத மூடர்கள்”என தன்னைத் தடுப்பவர்களை இகழ்ச்சியாக எண்ணும் கதைநாயகி, ஒருவாறு கசினோவிலிருந்து மீண்டு வீடுதிரும்பப் போகிறாள் என வாசகர் நிம்மதிப்பெருமூச்சு விட எத்தனிக்கையில் அவளோ, “கசினோவை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினாள்”என சற்றும் எதிர்பார்க்காத முடிவோடு, மாயக்குதிரை ஒரு முத்திரைக்கதையாய்ச் சிறப்புறுகிறது.

‘மெத்தப் பெரிய உபகாரம்’, இன்றைய தமிழ்ச்சமூகத்தில் பிள்ளைகளின் தேவைகளுக்காய் அந்நியதேசங்களை நோக்கி வலிந்தழைக்கப்படும் முதியபெற்றோரின் சமூகச்சாட்சியாய் இராசலட்சும்மி அம்மா, வெகுளியாய் வெள்ளந்தியாய் அவலப் படும்போது மனம் இயலாமையால் ஏங்கித் தவிக்கிறது. இராசலட்சுமி அம்மா போன்ற பலநூறு அம்மாக்களும் அப்பாக்களும் தமது சொந்த நாட்டில் தனித்து வாழவும் முடியாமல், கொஞ்சமும் பொருத்தமற்ற புலம்பெயர் நாடுகளின் சூழலில் ஒன்றியிருக்கவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்புகளாய்த்தவிக்கின்றமை பலருமறிந்ததே. கதையின் முடிவில் “மெத்தப்பெரிய உபகாரம்” என இராசலட்சுமி அம்மா விடை பெறும்போது பரிதாபமும், துக்கமும் ஒருசேரத்தோன்றுகிறது. புலம்பெயர்வு எமது பெற்றோரின் நிம்மதியான முதுமைக்காலத்தை அவதிக்குள்ளாக்கி நிற்பதைக் கதை தத்துரூபமாகச் சித்தரிக்கின்றது.

‘கடன்’ மையக்கதாபாத்திரமாக ஆணொருவரைக் கொண்டமைந்த ஒரே கதை. புலம்பெயர் தேசத்து வாழ்க்கையில், இரக்கசுபாவத்தில் ஏமாளியாகி, அவதியுறுதலை இயல்பாக எம்மில் ஒருவராய்க் கண்முன் நிறுத்துகிறது. பெண் என்ற விதிப்பாடுகளில் இருந்து விடுபட்டு கடிவாளத்துடன் பாயத்துடிக்கும் பெண்குதிரையை சித்திரிக்கும் அட்டைப்படத்துடன் கதை இலகுவாய் பொருந்திப்போய்விடுகிறது. முடிவாக, ஒன்றை ஒன்று மிஞ்சும் பத்துச் சிறந்த சிறுகதைகளை வாசித்த திருப்தியில் ‘வாழ்த்துக்கள்’ தமிழ்நதி. உயரங்கள் தொடுக.

உன்னதங்கள் தருக. ❑

◉ கவிஞர். தக்ஷன், தஞ்சை

# காமசாசரம்

வசனமற்ற படங்களின்
மூளைப்புணர்ச்சி

மதிய மழையில்
வெள்ளை ரவிக்கை

குனிந்து போடும் கோலத்தில்
புழுதியாகும் மனது

இருக்கையற்ற பேருந்தின்
நெருக்கத்தில் மல்லிகை மணம்

காசுக்கு புணரும்
தாசியின் சிணுங்கல்

எதிர்வீட்டு விதவையின்
அமாவாசை இரவுகள்

துடை தடவும்
ஹோமோ நண்பன்

ஆற்றங்கரையோர
வயோதிக வாயூரிசம்

ஹன்சபந்த
கோபுரக்கலவி

ஆலய
எதிர்வரிசை பெண்ணின்
விலகிய முந்தானை

எங்கும் எதிலும்
கடவுள் தோற்று
காமம் ஜெயிக்கிறது

❑

---

சூல் கொண்ட வெட்டுக்கிளியின்
அடி இறகை விலக்கி
உன் பல் குத்தும் குச்சியால் அதன்
முட்டைகளை நிரடுவது போலவே
நிரடுகிறாய் ப்ரியங்கள் நிரம்பிய
என் ஆதிக் காதலின் இரைஞ்சுதல்களை ❑

◉ கா.ந.கல்யாணசுந்தரம்



சுழலும் பம்பரம்
தலையாட்டிக் கவிழ்கிறது
ஆளுமையோடு சாட்டை

❑

சிறு வயது
இசைக்கருவி நினைவில்
பூவரசு இலை ஊதல்

❑

தேடல் இலக்கியத்தின்
திறவுகோலானது
கண்ணாமூச்சி விளையாட்டு

❑

கூட்டிக் கழித்துப் பார்த்து
தோல்வியடைகிறார்
கணித ஆசிரியர்

❑

பாரம்பரிய குணங்கள்
புத்துணர்வு பெற்றன
படைப்பின் ரகசியம்

❑

பிறக்கும்போதே
பயணிக்கும் திசை அறிந்தன
ஓடும் நதிகள்

❑

# நீலக்கன்னி

◉ மஞ்சுளா



அந்திநேரம்
வீடெங்கும் நிறைகிறது
வெளிச்சம்

இமைகள்
மூடித் திறந்த போது
வடிவமற்ற ஒளித்துணுக்குகள்
விழியின் ஆழத்தில்
பட படக்கின்றன

ஒரு வண்ணப்படம்
திரையில் நகர்வது போல்
என் முன்னே நகர்கிறது
உலகம்

என் உள்ளங்கையில்
மின்னல் கோடுகளை
வரைந்து போனது
வெளிச்சத்தின் ரேகைகள்

ஒரு மின்னலை எடுத்து
வயிற்றுக்குள்
சுருட்டிக் கொண்டேன்


இமைகளுக்கு கீழ்
இருளும் ஒளியும் பிணைந்து
கனவுகள்
படமெடுத்து ஆடின
மதுவின் போதையில்
மயக்க விழிகள்
விடிய விடிய
ஆடிய பொழுதுகள்

ஒரு கோழியின் கூவலில்
விழிக் கூட்டிலிருந்து மெல்ல
மறையத் தொடங்குகின்றன

விழிப்பறவை
சிறகை விரித்துக் கொள்ள
கனவுக் குஞ்சுகளுக்கு
இரை தேட
என் வானம் நோக்கி பறக்கிறேன்

தொலைதூர அடிவானில்
உறைந்து கிடக்கின்றன
விழி மூடிப் பறந்த
அனாதைக் கனவுகள் ❑

◉ சரஸ்வதிராசேந்திரன்



# அக்கறை

“ஏங்க நான் சொல்றேன்னு கோபப் படுறீங்க

ஆனாப்பாருங்க , தினமும் வருகிறவர்தானே

பேப்பர் போடுபவர் அவரைப் பார்த்து ஏன் இப்படி குரைக்கிறது உங்க ஜிம்மி ‘’வனிதா

கேட்டாள்.

‘’ வேண்டாதவங்க கால் பட்டா குற்றம் கை பட்டா குற்றம் என்று சொல்வார்களே அது மாதிரி இருக்கு நீ சொல்றது ஏன்னா இன்னைக்குப் பேப்பர் போடுபவருக்குப் பதிலா புதுசா வந்தான் பையன் அதனால குரைக்குது அது தெரியாம‘’

எரிந்து விழுந்தான் மோகன்

மோகன் வனிதாவிற்கு குழந்தை இல்லை மோகனுக்கோ நாய் பூனை இவற்றின்

மீது அலாதியான பாசம் இந்த ஜிம்மியை 200 ரூ கொடுத்து வாங்கி வந்து வளர்க்கிறான் வனிதாவிற்கோ நாய் பூனை அலர்ஜி .மோகன் வேலைக்குப் போய் வந்தபிறகு நாய்க்கு விதம் விதமான விசேஷ பயிற்சி கொடுப்பான் அதுவும் அவனது அன்புக்கு அடிமையானதால் பொறுப்பாக கற்றுக் கொள்ளும்.

தெருக்கோடியில் இருக்கும் கடையிலிருந்து சாமான்கள் வாங்கி வரும் வீட்டிற்கு . கூடையில் சாமான் லிஸ்டை எழுதி பணத்தையும் வைத்தால் அந்தக் கூடையை வாயில் கவ்வி எடுத்துப்போய் கடையில் நின்றால் கடை முதலாளி சாமான்களையும்

மீதி பணத்தையும் கூடையில் வைப்பார் அழகாக எடுத்து வந்திடும் ஜிம்மி இந்த அதிசயத்தை தெருவே வேடிக்கை பார்க்கும். அதேபோல் முகம் தெரியாதவர் வந்தால் வீட்டி அருகில் கூட அனுமதிக்காது நல்ல கூர்க்காவாக காவல் காக்கும். இருப்பினும் அதனிடம் உள்ள வெறுப்பு போகவில்லை வனிதாவிற்கு.

ஒரு நாள் - அலுவலகத்தில் பணம் கொடுத்து பாங்கில் கட்டச்சொல்லியிருந்தார் மானேஜர் ஸ்கூட்டரின் பாக்ஸில் பணத்தை வைத்துவிட்டு கிளம்பினான் மோகன்

காலையில் எலக்ட்ரிக் பில் கட்ட கடைசி நாள் என்று மனைவி சொன்னது ஞாபகம் வர வீட்டிற்கு வந்து ரீடிங்க் பில்லைப் பார்த்துவிட்டு பணத்தையும் எடுத்துப்போகலாம் என வந்தவன் அவசரத்தில் மானேஜர் கொடுத்த பையை

ஸ்கூட்டரிலேயே வைத்துவிட்டு உள்ளேப் போய் பணம் எடுத்துவருவதற்குள் ஒரு இளைஞன் அந்த பணப்பையைத் தூக்கிக் கொண்டு ஓட.. மோகன் திடுக்கிட்டான்

அவனுடன் கூடவே வந்த ஜிம்மி அவனைத் துரத்திக்கொண்டு ஓடியது .. பயந்துபோன இளைஞன் எதிரில் வந்த பஸ்ஸில் தொற்றிக்கொண்டான் ஸ்.. அப்பாடித் தப்பித்தேன் என்று பெருமூச்சு விட்டபடி

பஸ்ஸை விட்டு இறங்கியவன் கிராமத்திற்குள் நுழைய முற்படுகையில்


பின்னால் குரைப்புசத்தம் கேட்க திடுக்கிட்டான் அட சனியன் இவ்வளவு

தூரமா வரும் என்ற ஆத்திரத்தில் கல்லை எடுத்து வீசினான் ஆனால் ஜிம்மி கலங்கவில்லை துரத்தியது ஓடியவன் கல் தடுக்கி வீழ்ந்தான் கருப்பண்ணசாமி தெய்வத்தின் முன்னால்வீழ்ந்தான் .வேகமாக ஓடிவந்த

ஜிம்மி அந்த பையை பறித்துக்கொண்டு முதலாளியிடம் ஓடியது. பையைப் பார்த்ததும்அதன் அக்கறையைப் பார்த்து மோகன் ஜிம்மியைக் கட்டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட முதன் முறையாக இரைக்க இரைக்க ஓடிவந்திருந்த ஜிம்மியை வாஞ்சையோடு தடவிக்கொடுத்தாள் கண்கள் கலங்க வனிதா. வீட்டுக்கார அம்மாளின் அன்பில் நெகிழ்ந்து அவளை உரசி நெகிழ்ந்தது ஜிம்மியும். ❑

◉ சா.கா.பாரதி ராஜா,

# பட்டம்



மாலைப்பொழுது.

மெத்தையில் குப்புறப்படுத்து உறங்கிக் கொண்டிருந்த யாழன் திடுக்கிட்டு எழுந்தான்.

படுக்கைக்கு எதிரே சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி சரியாக நான்கைக் காட்டியது. வேகவேகமாக படுக்கையிலிருந்து இறங்கியவன் மாடி நோக்கி ஓடினான்.

“டேய்! பாலக் குடிச்சிட்டுப் போடா!”

அம்மாவின் அழைப்பைப் பொருட்படுத்தாமல், இரண்டு இரண்டு மாடிப்படிகளாகத் தாவி மொட்டை மாடிக்குச் சென்றான்.

எதிர் வீட்டில் சிவா இடது கையால் நூலின் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு, வலது கையால் நூலை கொஞ்சம் கொஞ்சமாக மேல்நோக்கி விட்டுக் கொண்டிருந்தான்.

சிவா பட்டம் விடுவதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான் யாழன். கோடை விடுமுறையில் மாலை வேளையில் மாடிக்குச் சென்று பட்டம் விடுவதையும், பறக்கும் பட்டத்தையும் வேடிக்கைப் பார்ப்பது யாழனுக்கு மிகவும் பிடித்த ஒன்றாகிவிட்டது.

யாழன் முதல் தளத்திலும், அவர்களது வீட்டு உரிமையாளர் தரை தளத்திலும் குடி கொண்டுள்ளனர். வீட்டு உரிமையாளரின் மகன் லோகுவும் யாழனோடு சேர்ந்து பட்டம் விடுவதை வேடிக்கைப் பார்ப்பான்.

அடுப்பங்கரையில் குழாயில் தண்ணீரைத் திறந்துவிட்டு, பாத்திரத்தை முன்னும் பின்னுமாக தேய்த்துக் கொண்டு, தலையின் முன் விழுந்த முடியை முழங்கையால் தூக்கி காதின் பின்புறம் விட்டு,

“பாலக் குடிச்சிட்டுப் போடானு சொன்னேன். எங்க காதுல வாங்குனா. ஓட்றான். மேல ’ஆ’…னு பட்டத்தையே பாத்துக்கிட்டு இருப்பான். எதாச்சும் எழுதனும் படிக்கனுமுனு கிடையாது. சொல் பேச்சயும் கேக்க மாட்டேங்குறான்” புலம்பினாள் யாழனின் தாய் கோசலை.

நாற்காலியில் அமர்ந்துகொண்டு ரிமோட்டில் சேனலை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டே வந்த சுனிலின் தந்தை அன்பு மௌனமாக தனது மனைவி கோசலையின் புலம்பலைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

“ஒருத்தி பொலம்பறாளே! எதயும் கேக்கறதுல்லனா எப்படி? புள்ளையும் கேக்கறதுல்ல. புருஷனும் கேக்கறதுல்ல. ஒங்கல மாதிரியே இருக்கு ஒங்க புள்ளையும்” பாத்திரத்தைக் கழுவிக் கொண்டே கொஞ்சம் கணவனையும் கழுவி ஊற்றினாள்.

இரு கைகளையும் ஒருசேர பூமியை நோக்கி வணக்கம் செய்வது போல் கழுவிவிட்டு, புடவையை சரிசெய்துகொண்டு ஹாலுக்கு வந்தவள்,

“பக்கத்து தெருவுல இந்தி டூஷன் இருக்காம். பக்கத்து வீட்டுப் பசங்க போகுதுங்க. யாழனைக் கொண்டு போயி சேருங்கனு எத்தனை மொறை சொல்றன். எப்பப் பாத்தாலும் விளையாட்டாவே இருக்கான்”

டிவியை ஆப் செய்துவிட்டு, இருக்கையிலிருந்து எழுந்த யாழனின் தந்தை அன்பு, “சும்மா படி படினு டார்ச்சரு பண்ணாதே. லீவு தானே. விளையாடட்டும். ஏட்டை மட்டுமே படிச்சா போதுமா? வாழ்க்கையை படிக்கனும். சுத்தி இருக்கிறதையும் படிக்கனுமில. ஆம்பிள கொழந்தங்க அப்படித்தான் இருப்பானுங்க. இப்போ விளையாடாம எப்போ விளையாடப் போறான்?”

மனைவி கோசலைக்கு பதில் சொல்லிவிட்டு, மாடிக்கு கிளம்பினார் யாழனின் தந்தை அன்பு.

தான் வருவதைக் கூட கவனிக்காமல் பட்டத்தையே ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்த மகனைப் பார்த்த அன்பு, மேல் படிக்கட்டில் அமர்ந்து கொண்டார்.

அங்கே அங்கே என்று ஏழெட்டுப் பட்டங்கள் வானில் பறந்து கொண்டிருந்தன. சிறுவர்களும், பெரியவர்களுமாக சேர்ந்து பறக்கவிட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தி சாயும் வேளையில் பட்டங்கள் ஒவ்வொன்றாக மாடியில் இறங்க ஆரம்பித்தன. யாழனும், லோகுவும் பட்டத்தை விடுத்து ஓடிப்பிடித்து விளையாட

ஆரம்பித்தனர்.

இரவு யாழன் சாப்பிட்டு உறங்க ஆரம்பித்தவுடன், யாழனின் தந்தை பிளாஸ்டிக், குச்சி, ஒட்டும் பிசினை எடுத்துக் கொண்டு வந்தார். ஹாலில் அமர்ந்து அரை மணிநேரமாக தனியாக ஒட்டி வெட்டிக் கொண்டிருந்தார்.

காலை ஏழு மணிக்கு எழுந்த யாழனிடம் அவனது தாய், "டேய்! யாழா! டிவிப் பக்கத்துலப் பாருடா!" என்றாள்.

தாய் சொல்வதைக் கேட்டும் கேட்காதது போல் நடந்த யாழன், சோம்பலாக இருக்கையில் சென்று அமர்ந்தான்.

அறை முழுக்க மெதுவாக வட்டமடித்த அவனது பார்வை டிவியின் அருகில் சென்றது. அங்கே ஒரு பட்டம் இருந்தது. புதிய பட்டம் காந்தத்தைப் போல் அவனை இழுத்தது. டிவியின் அருகில் ஓடியவன், இருகைகளாலும் பட்டத்தை பத்திரமாக எடுத்து ஆசை ஆசையாக முழுக்கப் பார்த்தான்.

"ஐ! காத்தாடி! அம்மா! அம்மா!"

பட்டத்தைப் பார்த்துக் கொண்டே அழைத்தான்.

"என்னடா?" சமையலறையிலிருந்தே கேட்டாள்.

"ஏதும்மா இந்த காத்தாடி. வாங்கினியா?" பட்டத்தை எடுத்துக் கொண்டு அம்மாவிடம் வந்தான்.

"டிவியாண்ட பாருடானு சொன்னா, காதுல வாங்கல நீ! இப்போ என்ன?"

"சொல்லுமா?"

"அப்பாதாண்டா! உனக்காக செஞ்சாரு"

அவனுடைய தந்தை அவனுக்காக ஆசை ஆசையாக செய்து வைத்திருந்தார். சாய்சதுரமாக இருந்த பட்டத்தை அழகாக செய்து வைத்திருந்த அவனது தந்தை, சூத்திரமும் சரியாக இட்டு வைத்திருந்தார்.

செய்தித்தாள் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்த அவனது தந்தை, மகனின் முகத்தில் வழியும் புன்னகையைப் பார்த்து ரசித்தார்.

நாளிதழை மேசையின்மீது வைத்துவிட்டு, கவரில் கொண்டு வந்த நூற்கண்டை யாழனிடம் அளித்தார்.

"இந்த சாதாரண நூலுல தான் விடனும். மாஞ்சா நூலுலலாம் விடக்கூடாது.

ஆபத்தானது. பட்டம் விடும்போது கவனமா இருக்கோனும்" என்று மகனுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

சரி என்று மண்டையை ஆட்டிவிட்டு, பட்டத்தை எடுத்துக்கொண்டு கீழ் வீட்டுக்கு பறந்தான். கீழ் வீட்டிலிருந்த லோகுவிடம் தனது தந்தை பட்டம் செய்து கொடுத்துள்ளதைக் காட்டி மகிழ்ந்தான்.

நேரம் ஆனது. கடிகாரத்தை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். எப்போது மணி நான்கு எட்டுமென்று. நான்கு மணியை எட்டியவுடன், படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தவன், ஹாலுக்குச் சென்று பட்டத்தை எடுத்தான்.

"டேய்! யாழா! இரு!" என அழைத்த அவனது தந்தை அன்பு டேப்பையும், கத்தரிக்கோலையும் கொண்டு வந்தார்.

"என்னப்பா?"

அவனது வலது கையைப் பிடித்து, ஆள்காட்டி விரலில் டேப்பைச் சுற்றினார்.

"எதுக்குப்பா இது?"

"காத்தாடி வுட்றல. நூலு காத்துல அசையும்போது தோலைக் கிழிக்காம இருக்க" சுற்றி முடித்து கத்தரிக்கோலால் முனையை வெட்டினார்.

"ஒனக்கு காத்தாடி வுடத் தெரியுமா பா"

"சின்ன வயசுல நாங்க வுடாததா" என்றவாறு புன்னகைத்தார்.

இருவரும் மாடிக்குச் சென்றனர். லோகுவும் மேலே வந்தான்.

மற்றவர்கள் காற்றாடி விடுவதை உன்னிப்பாக கவனித்திருந்ததால், லாவகமாக மேல்நோக்கி எழுப்பினான் யாழன். நூற்கண்டைப் பிடித்துக் கொண்டு உற்சாகப்படுத்தினான் லோகு.

பட்டம் மேலே பறக்க பறக்க அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி வழிந்து ஓடியது.

தந்தையின் முகத்தில் அமைதி நிலவியது. இருவரும் மாறி மாறி காற்றாடி விட்டுக் கொண்டிருந்தனர்.

"டேய்! யாழா! இன்னொரு காத்தாடி வருது. பாருடா. டீலு விடுடா"

"வேணாம்டா! இருக்கறது ஒன்னே ஒன்னு"

"விட்றா! எதுவும் ஆகாது" என்று சொல்லி முடிப்பதற்குள் அருகில் பறந்த மற்றொரு காற்றாடி யாழனின் காற்றாடி நூலினை அறுத்தது.

காதல் போல் மகிழ்ச்சியில் சுற்றித் திரிந்த பட்டம், நூலறுந்ததும் சோகம் கொண்டு கீழிறங்கி விலகிச் சென்று தூர விழுந்தது.

யாழனும், லோகுவும் வேகவேகமாக கீழி□றங்கி, காற்றாடி விழும் திசை நோக்கி ஓடினர். இருபது வீடுகள் தாண்டி, ஒரு வீட்டின் மாடிக் கொடியில் விழுந்தது காற்றாடி.

வேகவேகமாக ஓடிக்கொண்டே வந்த யாழனும், லோகுவும் பட்டம் விழுந்த வீட்டை நெருங்கினர். வெளிக்கதவைத் திறந்து ஆவலோடு படிக்கட்டில் மேலே சென்றனர். வேகவேகமாக சென்றதால், சத்தம் கேட்டு வெளியே வந்த வீட்டிலிருந்த பெண், கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

"யாருடா நீங்க! போங்கடா வெளியே!" குரலோடு ஒரு கையும் அவர்களை வெளியே போகக் கூறியது. கத்தினாள்.

அவளின் சத்தத்தால் அதிர்ந்து போன இருவரும், பட்டத்தை எடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் பாதி படிக்கட்டிலேயே பரிதாபமாக நின்றனர்.

"இறங்குங்கடா முதல்ல. தொறந்த வீட்ல நாயி நுழையற மாதிரி வரானுங்க. வெளியே போங்கடா" ஒரு அடி மேலே வந்து மேலும் கத்தினாள்.

அச்சம் அவர்களின் முகத்தில் மேலும் தொற்றிக் கொண்டது. கொஞ்சம் சுதாரித்துக் கொண்ட யாழன், வலது கையின் ஆள்காட்டி விரலை மேல்நோக்கி உயர்த்தி, " காத்தாடி மேல விழுந்திடுச்சி ஆண்ட்டி. அத எடுக்கத்தான் வந்தோம்" பொறுமையாகக் கூறினான்.

கூந்தலை முடிந்து கொண்டே மேலும் இரு அடிகள் வைத்து," போங்கடா முதல்ல. காத்தாடி கீத்தாடின்னு இங்க வர்ற வேல வெச்சிக்காதீங்க" மேலும் கத்தினாள். அக்கம் பக்கத்தினர் பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தனர்.

மேலும் தயக்கத்துடன், " பிளீஸ் ஆண்ட்டி! எடுத்துட்டுப் போயிட்றோம் ஆண்ட்டி" இருவரும் கேட்டனர்.

எதிரில் இருந்த வீட்டுக்காரர் பால்கனியிலிருந்து " இதுங்களுக்கு இதே வேலயா போச்சு. பாவம் பாத்து விட்றாதீங்க. நாளுக்கு ஆளு இல்லாத நேரம் பாத்து வீட்டுக்கு வந்து திருடுங்க" அவர் பாணிக்கு ஏற்றி விட்டார்.

"ஒழுங்கா வெளியே போ. இல்ல திருட வந்திருக்கங்கனு போலிசுல புடிச்சிக் கொடுத்துடுவேன். இங்கலாம் வர்றக் கூடாது போ வெளியே" திட்டிக் கொண்டே கீழே வர, அவர்களை வெளியே தள்ளி, வெளிக்கதவை சாத்தினாள்.

இருவரும் ஒருமுறை மாடியை பார்த்துவிட்டு, விரக்தியோடு சென்றனர். 'என்னோட காத்தாடிய தானே எடுக்கப் போனேன். அவங்க காத்தாடிய எடுக்க வந்த மாதிரி திட்றாங்க' மனதுக்குள் புலம்பினான்.

அவர்கள் சென்றதும் மாடிக்குச் சென்று காற்றாடியை எடுத்து வீட்டிற்குள் வந்தாள். தனது மகனுக்குக் கொடுத்து "விளையாட வச்சுக்குடா" என்றாள்.

அவளது மகனும், "ஐ! காத்தாடி" என்று ஆசையாக வாங்கினான்.

வெறுங்கையுடன் யாழனும், லோகுவும் தலைகுனிந்து வீட்டிற்கு வருவதை அன்பு மாடியிலிருந்தவாறே உற்றுநோக்கினார்.

"டேய்! எங்கடா போயிட்டு வர்றீங்க" கேட்டாள் தாய்.

"காத்தாடி விழுந்திடுச்சி எடுக்கப் போனோம்"

"எங்க காத்தாடி?"

"அங்க வீட்ல விழுந்தது.. அந்த ஆண்ட்டி எடுக்க விடல" சோகத்தோடு கூறினர்.

"ஒரு காத்தாடிய கூட ஒழுங்கா ஒரு நாளு கூட வெச்சிக்க முடியல. நேத்தெல்லாம் அந்த மனுஷன் கஷ்டப்பட்டு செஞ்சாரு. அடுத்த வூட்டுப் பொருள எடுத்துக்கீதுங்க என்ன ஜென்மமோ"

மாடிக்குச் சென்ற இருவரும் மீண்டும் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். இவ்வளவு நேரம் மகிழ்ச்சியைத் தந்த வானம், தற்போது அவர்களுக்கு சோகத்தை தந்து கொண்டிருந்தது.

காற்றாடிகள் பறந்து கொண்டிருந்தன. ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கையில், தூரத்திலிருந்து ஒரு காற்றாடி அறுந்து கீழ்நோக்கி விழ்ந்து கொண்டிருந்தது.

"டேய்! யாழா! இங்கப் பாரு! ஒரு காத்தாடி அறுந்து விழுதுடா" யாழனின் பார்வையை திசை திருப்பினான் லோகு.

"ஆமாம் டா" உற்சாகமானான் யாழன்.

"புடிடா! புடிடா!" என்றான் லோகு.

அதற்குள் அவர்களின் வீட்டைக் கடந்து சென்றது.

"டேய்! புடிடானா விட்டுட்டியே" கீழ்நோக்கி லோகு ஓட முயல, நூலின் முனை அவர்களின் மாடியில் தவழ்ந்து நகர்ந்து கொண்டிருந்தது.

இந்த முறை நூலின் முனையை கையில் பிடித்துக் கொண்ட யாழன், காற்றாடியை

இழுத்தான். கார்ட்டூன் வரையப்பட்ட மிகப்பெரிய காற்றாடி அவர்களின் கையில்.

அவர்களின் முகத்தில் மீண்டும் மகிழ்ச்சி தொற்றிக் கொண்டது.

“ஒன்னுப் போச்சு! அதவிட பெருசு கிடச்சிடுச்சி” மிகவும் சந்தோஷப்பட்டனர்.

“இத பறக்கவிடலாம் டா” மகிழ்ச்சியாகக் கூறினான் லோகு.

“ம்..” என்று நூலைப் பிடித்த யாழன், கீழே சத்தம் வருவதைக் கண்டுப் பார்த்தான்.

மூன்று சிறுவர்கள் அவர்களின் வீட்டை நோக்கி வேகமாக ஓடி வந்தனர்.

மாடியில் ஏற ஆரம்பித்த அவர்களை, “எங்கடா வந்தீங்க. இங்கலாம் வர்றக் கூடாது. போங்க” என்றாள் யாழனின் தாய்.

“காத்தாடி விழுந்திடுச்சி. எடுத்திட்டுப் போயிட்றோம்” பதிலுறைத்தனர் சிறுவர்கள்.

“அதல்லாம் இங்க வர்றல. இங்க வர்றக் கூடாது. போங்கடா” துரத்தினாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த யாழன் மாடியிலிருந்து சிறுவர்களை அழைத்தான்.

” என்ன காத்தாடி?”

”கார்ட்டூன் போட்டிருக்கும்”

காற்றாடியை கையில் எடுத்துக்கொண்டு கீழே சென்று சிறுவர்களிடம் “இந்தா ஒங்க காற்றாடி” அளித்தான்.

“தாங்ஸ்” என்று சொல்லிவிட்டு சிறுவர்கள் வெளியே நகர ஆரம்பித்தனர்..

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவனது தந்தை அன்பு விற்கு மனதுக்குள் மகிழ்ச்சி. அந்த சிறுவர்களை அழைத்து, மாஞ்சா நூலுல காற்றாடி விடக்கூடாது. பத்திரமாக விட வேண்டுமென்று அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தார். சிறுவர்கள் சரியென்று சொல்லிவிட்டு காற்றாடியோடு வேகமாக பறந்தனர்.

மாடிக்கு மீண்டும் வந்த யாழன், மீண்டும் வானத்தையே பார்த்தான். இப்போது மகிழ்ச்சியாக.


மறுநாள் காலை யாழனுக்கு அதைவிடப் பெரிய காற்றாடி டிவியின் அருகில் அன்புப் பரிசாக காத்திருந்தது.

❑

# ரோஷான் ஏ. ஜிப்ரி கவிதைகள்

## "நிலம் கொத்திப் பறவை"

பேராசைகளில் உறைந்தபடி சமாதிய
கட்டிடக் காடுகளாகும்
நதிகளின் பெருமூச்சுகள்
கருக்கலைக்கப்பட்டு
மொட்டில் கருக்கப்படும்
மழைப்பூக்கள்
இன்றைய காலத்தில்...,
இனி எந்த குளத்திலும் மலராது
கரைகள் காவுகொள்வது
காணச் சகியாமல்
இன்னும்
அலைகள் அலையும்
சுனாமி சூட்சுமங்களோடு..
நூற்றாண்டுகளாய் நீளும்
ஆறடி அடக்கம் இனிமேல்
ஆழ்துளையாகும்
நீண்ட சவக்குழிகளாய்
வனத்தை கூறுபோடும்
மூர்க்கத்தின்
அதி உச்சத்தில் சுரண்டடப்படும்
வேர்களின் வலி..
உலகத்தின் வலியாய் ஓரிடம் உறையும்
கனவுகளால் பூசப்பட்ட வாழ்வின்
முகங்களோடு
அதிகாரம் அண்மித்துக்கொண்டிருக்கும்
போதை பொழுதுகளில்...



எதிர்காலமும் தள்ளாடும்
நிலம் கொத்திப் பறவையின்
வானமென்ன பூமியும்
இனிவரும் நாளில்..
ஒன்றைத்தவிர வேறொன்றுக்கும்
லாயக்கற்று
எரியூட்டும் ஒதுக்கிடமாய்
சாம்பல் பூத்த எச்சங்களால்
சுடலையாய் கிடக்கும்!

❑

**கனிக் கூட்டங்கள் ஏந்திய உன் வருகை.**

எமக்கென நீ விட்டுச்சென்ற
ஒவ்வொரு கணங்களும்
ஒரு கோடைக்கும்,மாரிக்கும்
இடைப்பட்ட காலத்து மழை போல்
மிகப் பெறுமதி வாய்ந்தவை
போன முறைக்கும்
இம்முறைக்கும் நடுவே
நிறையவே நிகழ்ந்து விட்டன
இதில் நாங்கள் தனித் தனியாய்
தவித்து கை கழுவி வாய் கட்டி
எந்த அறையில் எங்கிருக்கிறோம்
என்று தேடும் அளவு
அபத்தமும் ஆபத்தும்
நீ
வளங்களை வாரி
வழங்கும் வரம் என்பதால்
சொப்பனங்களை அண்மித்த
எமது வாழ்வை மீளமை
ஏப்பமிடும் பகல்களை சிறைபிடி
விழித்திருந்து எம்முடன்
பிரார்த்திக்கத் தகு
இரவுகளை விரும்புவதால்
பிறை கூட்டங்களுடன்
இலங்கும் வானமே
உன் பொன்னந்திகளைத் தா
பிணியென்னும் பெரும் சிறையில்
தவிக்கும் உலகை
பிணையெடு
எதிர் பார்க்கும் நிமிசத்தில்
வந்தமர்ந்து ஒட்டிக் கொள்கின்றன
உன் பேரீத்தம்பழ பிரியங்கள்
“இஃப்தார்”என்ற இதமாய்
இனிக்கும் மதுரங்களை நா வாசிக்க
மன ஆடையை
வெள்ளாவி வைத்து வெளுக்க
எமது இடை மூட்டைகளை
துலாம் பார்க்க
உன்னிடமே ஒப்படைக்க
வேண்டியுள்ளன.
“ஸஹர்” சமவெளியில்
வேரினை விட்ட இடத்திலிருந்து
தொடங்க
நிரந்தர திசைக்கான எமது இருப்பை
ஆளப் பதிக்க
இறை பிரியத்தின் அதி உச்ச
கிளைகளை
நாங்கள் மேலே பரப்ப
குர் ஆனிய பூக்கள் குரல்வழி பூக்க
புனிதமிகு “ரமழானே”
கனிக் கூட்டங்கள் ஏந்திய உன்
வருகையுடன்
சுவனத்தை விட்டுச்செல் எம்மிடம்.

❑

◉ ரா. துர்கேஷ்வரி

உடை விலகும்
இரு நொடியில்
பெண்ணின்
அங்கங்களை
தீண்டித் தொலைக்கும்
கண்கள்...

கூட்ட நெரிசலில்
சிக்கித் தவிக்கும்
பெண்ணின்
அந்தரங்கம் அலசும்
கைகள்...

தனியே செல்லும்
பெண்ணின்
மனம் பதைக்கப்
பின்தொடரும்
கால்கள்...

அந்தநாட்களில்..
பெண்ணின்
உதிரம்படும்
உடை கண்டு
ஏளனம் பேசும்
முகவாய்கள்..

வறுமையை விரட்டவே
வேலைக்குச் செல்லும்
பெண்களின்
இளமையை விரட்டும்
விடாக்கண்டன்...

நண்பன் என்று
நல்கும்
பெண்ணிடமும்
நயவஞ்சகம் கக்கும்
விஷப்பாம்புகள்...

அண்ணன் என்றாலும்..
தம்பி என்றாலும்..
அப்பா என்றாலும்..
உன் உறவது
தேவையில்லை
உடல் தான்
என் இச்சையென்று
இம்சிக்கும்
நெஞ்சங்கள்...

இப்படி
பலஉருவில்
ஆண்கள்
உண்டென்றாலும்..

பெண்ணின் உடலை தாண்டியுள்ள
மனதை..
நம்பிக்கையின் கீற்றால்.. நேர்மையின்
ஊற்றால்.. ஆண்மையின்
தாய்மையால்..
வருடிக் கொண்டிருக்கும் ஆண்களால்
தான்
இன்னும் வெளியில்
உலவிக் கொண்டிருக்கிறார்கள்
பெண்கள்... ❑

◉ முனைவர் இர.ஜோதிமீனா




# நூலாய்வு - தமிழ்நதியின் “ பார்த்தீனியம்”

தமிழ்நதியின் “பார்த்தீனியம்“ ஈழத்தில் போர் மூண்டசூழலில் எழுதப்பட்ட புதினம். போரின் கொடூரங்களையும் அவலங்களையும் நம் கண் முன் நிறுத்துகிறார். ஈழத்தமிழ்விடுதலைக்காக தமிழர்கள் போராடிய காலத்தில் நிகழ்ந்த அனைத்துச் செய்திகளையும் நிகழ்வுகளையும் இந்நாவலில் பதிவுசெய்துள்ளார்.

தனித் தமிழீழத்திற்காகப் போராடிய தமிழர்களை சிங்களஇராணுவம் கடுமையாக இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குகிறது. சிங்களஇராணுவத்திற்குத் துணையாக இந்திய இராணுவம் செயல்படுகிறது. இரண்டு இராணுவங்களையும் விடுதலைப்புலிகள் மற்றும் தமிழீழ அமைப்பு இயக்கத்தினர் எதிர்க்கின்றனர். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு இளைஞாகள் தம்மக்களையும் மண்ணையும் காக்க தங்களை இயக்கத்தில் இணைத்துக் கொள்கின்றனர். தமிழ் இளைஞர்கள் பலர் விடுதலை நோக்கிய பயணத்தில் பல்வேறு இயக்கங்களைத் தொடங்கி இந்திய சிங்கள இராணுவத்தை எதிர்க்கின்றனர்.

இப்புதினத்தின் முக்கிய கதாமாந்தர்கள் வசந்தன் வானதி. இவர்களின் பள்ளிப்பருவத்தில் வளர்ந்த காதல் புதினத்தின் இறுதிவரை தொடர்கிறது. வானதி கல்லூரிப் படிப்பைத்தொடர்கிறாள். வசந்தன் இயக்கத்தில் சேருகிறான். இயக்கத்திற்காகப் பரணி என்ற பெயர் மாற்றப்படுகிறான். இயக்கத்தில் இருந்து கொண்டே காதல் தொடர்கிறது என்றாலும் காதல் வாழ்க்கையைவிட இயக்கத்துக்கே முதலிடம் தருகிறான் பரணி.

எண்பத்தி மூன்றாம் ஆண்டு சிங்களர்களால் ஈழத்தமிழர்களுக்குத் தொடர்ந்த இன்னல்கள் எண்ணபத்து ஏழு ஆண்டுகள் வரையும் நீடித்த இனக்கலவரத்தால் தங்கள் வாழ்வாதாரத்தையும் துன்பங்களையும் துயரங்களையும் கண்டு வந்த மக்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுவதற்கு காதல் ஒரு பற்றுகோலாக இருப்பதை உணரமுடிகிறது. "என்னதான் குண்டு வீச்சுக்குள்ள பதறித் துடித்தாலும்அகதியளா அலைஞ்சாலும் சாவோட சண்டைக்கு நிண்டாலும் காதல்தான் இந்த வாழ்க்கையை சகிச்சுக்கொள்ளப் பண்ணியிருக்கு. அதுமட்டும் இல்லாமப் போனா நாங்கள் எவ்வளவு வறண்ட மனுசரா மாறியிருப்பம்" (ப.307)என்பதை படிக்கிறபோது காதலின் வலிமையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

போரின் உச்சக்கட்ட காலம். மருத்துவமனை, கல்விக்கூடம், நூலகம் என பொதுமக்கள் மற்றும் அப்பாவிமக்கள் இருக்கும் இடமெல்லாம் எரிகணைகளின் வீச்சுக்குப் பலியானோர், துவக்குகளின் குண்டுக்கு இரையானோர் செல்லடிகளால் சிதைந்து போனோர் என ஈழத்தமிழர்களின் இன்னல்கள் நம் நெஞ்சை உருக்குகின்றன. உறுப்புகள் இழந்தோரும் உயிர்த்துறந்தோரும் வீதியெங்கும் விழ்ந்து கிடக்கின்றனர். புலிகள் இயக்கத்தில் தன்னைஇணைத்து உயிர்த்துறந்த இளைஞன் திலீபனின் மரணம் நெஞ்சை உருக்குகிறது.

"காந்தி தேசத்தில் நீதி இதுதானா? இந்தியா சிங்களப்படைகளைத் தட்டிக்கேட்காமல் தட்டிக்கொடுப்பது ஏன்?" என்று கேட்பது தமிழர்களாகிய நமக்கு தலைகுனிவே! இந்தியாவில் இருந்துகொண்டு நாம் அண்மையில் இருக்கும் நம் ஈழத்தமிழர்களுக்கு எந்த உதவியும் செய்ய இயலாமல் போன கையறுநிலையை

எண்ணி வேதனையும் தலைகுனிவும். இலங்கைக்கு இந்தியா அனுப்பிய இந்திய இராணுவம் (இந்தியஅமைதிப்படை)தமிழர்களுக்குச் செய்த கொடுமைகள் பல.

இந்திய அமைதிப்படை பெயரில் மட்டுமே! இவர்கள் செய்த அட்டகாசங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் அளவே கிடையாது. சிறார் முதல் முதியவயது பெண்கள் என எவரையும் விட்டுவைக்கவில்லை. வன்புணர்வுகளையும் இழிசெயல்களையும் கொன்றுபுதைப்பதையும் படிக்கும் பொழுது மனம் பதைபதைக்கிறது. இளைஞர்களையும் இளஞ்சிறார்களையும் இழுத்துச் சென்று சித்திரவதைசெய்து வதைத்து கொன்றொழிக்கும் செயல் மனத்தைக் கலங்கடிக்கிறது. (ப388-389) அகிம்சை வழியைக் கடைப்பிடித்த காந்திதேசத்தில் எதிர்மறை விளைவுகளைக் கண்ணுற்ற மக்களுக்குத் தாங்கொண்ணாத் துயரம். இவ்வேதனைகளைத் தன்எழுத்துக்களால் வடித்தெடுத்து நம் நெஞ்சை வலிக்கச்செய்துள்ளார் ஆசிரியர். இந்த வலியையும் வேதனையையும் படிக்கும் அனைவரும் உணரமுடியும்.

இந்திய ஆமியில் கேர்ணல் தயாள்சிங் நல்லவர். ஆமிக்காரர் என்றாலும் அங்கு நடக்கும் போரை இதுவரை தான் கண்டதில்லை என்பதையும் "இந்தப் போர் ஒரு முட்டாள்தனமான முடிவு" (ப.456)என்பதையும் அவர் உணர்கிறார். ஈழத்தமிழர்களின் துயரைக் கண்டு மிகவும் வருந்துபவர். அவர் கூறுகிறார் "நாங்கள் இந்த மக்களுடைய மனங்களை வென்றெடுக்கவேண்டும்" (ப.459)என்று இந்திய சிப்பாய்களிடம் சொல்கிறார். உயிர் பொருட்டல்ல ஆமிக்காரனுக்கு. இவருக்குள் உள்ள ஈரம் சிங்களஅரசிடமும் இந்திய அரசிடமும் காணமுடியவில்லையே! இனஅழித்தொழிப்பில் ஈடுபட்ட கயவர்களை எண்ணி மிகுந்த வேதனையும் வருத்தமும் மனத்தைக்குடைகிறது. இந்திய ஆமிப்படை வந்ததும் தாக்கப்பிடிக்கமுடியாமல் போவதையும் பதிவுசெய்துள்ளார். சிறுவன் (மரிய)சீலன் மனத்தில் நிழலாடுகிறான்.

இயக்கத்தைவிட்டு பரணி வெளிவருகிறான் இயக்கம் இவனை எதுவும் செய்யவில்லை. இவன் திரும்பவும் இயக்கத்தில் சேரலாம். இந்தியா வந்து பிறகு வெளிநாட்டுக்குச் செல்லலாம் என்பதாகப் பரணி முடிவெடுக்கிறான். வானதிக்காக வாழ்நாளெல்லாம் காத்திருக்கிறான் பரணி. வானதியும் தன்காதலை மறக்கமுடியாத துயரத்தோடு இருக்கிறாள்.

தனஞ்செயன் இப்புதினத்தின் முக்கியமான நபர். புதினத்தின் தொடக்கத்தில் பகடிவதையில் வானதிக்கு தனஞ்செயன் உதவுவதிலிருந்து ஒரு ஈடுபாடு உண்டு. எல்லாச் சமயத்திலும் வானதிக்கு உதவியாக இருக்கிறான். இவனது பிரிவு வானதிக்குள் ஒரு வெறுமை ஏற்படுத்துகிறது.

இந்திய ஆமிக்காரர்களால் வன்புணர்வுக்கு ஆளான சுபத்திரையை தனஞ்செயன் திருமணம் செய்வதன் மூலம் மிக உயர்ந்த நிலையில் மதிக்கப்படுகிறார்.

இயக்கத்தைவிட்டு வேறுநாட்டிற்குச் செல்வதாகப் பரணி திட்டம் போடுகிறான். என்றாலும் நிறைவேறாத காதலும் தமிழீழக்கனவு பொய்த்துப்போன வெறுமையும் தான் நமக்கு.

வானதிதான் தமிழ்நதியாக இருக்கக் கூடுமோ என எனக்குள் ஒரு கேள்வி எழுகிறது.

“பார்த்தீனியம்“ நாவலுக்குப் பொருத்தமான தலைப்பு. இந்திய இராணுவத்தினரால் பரவப்பட்ட “பார்த்தீனியம்“. இது ஒருவகை நச்சுப்பயிர். இப்பயிர் கஞ்சாவைவிட மோசமானது. பார்த்தீனியம் செடி மண்ணின் சத்துக்களை அழித்துவிடும். பிற நல்ல செடி மற்றும் தாவரங்களை வளரவிடாது. இச்செடிகளில் இருந்து வரும் காற்று சுவாசக்கோளாறை ஏற்படுத்தும். மெல்ல மெல்ல உயிர்களைக் கொல்லும் இந்நச்சுப்பயிர், மண்ணை மலடாக்குவது போல் சிங்களஇனத்தவர் தமிழ்ப்பகுதியில் மெல்ல மெல்ல ஊடுருவி போரிட்டு அழித்து இன்று தமிழ்ஈழத்தையும் தமிழர்களையும் வாழாநிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். இச்செடியால் தீங்கினைதான் இழைக்கமுடியும் அதுபோல் இந்தியாவால் ஈழத்தமிழர்களுக்கு மிகப்பெரிய தீங்கு மட்டுமே நிகழ்ந்தது.(ப.379)

போரினால் தங்கள் மண்ணையும் நாட்டையும் இழந்து சொந்த மக்களையும் விட்டுப் புலம்பெயர்ந்தோர் ஏராளம். புலம்பெயர்தலின் வலி என்பது நமக்குத் தெரிந்தவரை பொருட்களை இடப்பெயர்வு செய்வது மற்றும் பொருட்களை ஒழுங்குப்படுத்துவதன் இன்னல்கள் மட்டுமே நம்முன்வரும். ஆனால் தன் சொந்த மண்ணில் விரட்டப்பட்டு, ஆக்கிரமிப்புக்காரார்களால் துரத்தப்பட்டு, தேசம் விட்டு நாடு கடந்து கண்டம் தாண்டி பிறநாட்டில் உரிமையின்றி அயலகத்தில் அகதிகளாக வாழநேர்ந்தாலும் தம் மண்ணையும் மக்களையும் சொந்தங்களையும் மறக்காமல் எழுத்துகளில் வடித்து தங்கள் மனங்களைத் தேற்றிக்கொள்கின்றனர் ஈழத்தமிழர்கள்.

அருமையான புதினம். ஈழத்தமிழர்களின் வரலாற்றையும் மண்ணையும் மக்களையும் வாழ்வையும் நிறைய பேசுகிறது. ஆழமான காதலைச் சொல்கிறது. நாம், போரை நேரில் கண்டதில்லை போரின் கொடூரத்தைப் பாத்ததுமில்லை. போரை நேரில் கண்டவர்கள் போரின் துயரிலிருந்து மீளாதவர்கள். ஈழத்தமிழர்கள் அனுபவித்த கொடுமைகளையும் வலிகளையும் நம் மனக்கண்முன் நிறுத்துகிறது. தமிழ்நதி தன் எழுத்துகளால் காலங்கடந்தும் வாழ்வார். மக்கள் மனங்களில் நிற்பார்.

“பார்த்தீனியம்“ - தமிழ்நதி

நற்றிணை பதிப்பகம்

விலை 450

❑

◉ நாணற்காடன்

# முனியன் மகன்



“முனியா.. வா வா.. வந்து வாங்கிக்க..”

ரெண்டு தப்படி முன்னால வந்த முனியன் தோள்ல தொங்கிட்டிருந்த பறைய மொழங்கையால முதுகுப் பக்கமா தள்ளிப்பிடிச்சிகிட்டு, கொஞ்சமா முன்னால குனிஞ்சி, தர்மகர்த்தா கைப்படாம தூக்கிப்போட்ட பச்சக் கர போட்ட பருத்தித் துண்ட ஏந்திக்கிட்டாரு. அடிவாங்கி அடிவாங்கி அதிர்ந்து கிடந்த பறைக்கு இந்தக் கொஞ்ச நேர அமைதி தேவதான். துண்ட வலது கக்கத்தில் இறுக்கிப்பிடிச்சிக்கிட்டு, பூசாரி அள்ளிக் கொடுத்த துன்னீற ரெண்டு கையயும் குவிச்சி பவ்யமாக வாங்கி, கண்ணுல ஒத்தி “முனீஸ்பரா.. கருப்பா.. எல்லா சனங்களயும் காப்பாத்துடா சாமீ” என முணுமுணுத்தபடி நெத்தி நெறைய பூசிக்கிட்டார் முனியன்.

“உங்க ஆளுங்க எல்லாம் வந்து வாங்கிக்கோங்கப்பா” கூட்டத்திலிருந்து சத்தமா ஒரு குரல் வர அது எல்லா மனுசங்களையும் தொட்டுக்கிட்டு, அந்த வெட்ட வெளில பரவிச்சி.

பத்துப் பதினஞ்சி அடி ஒசரத்துல பீச்சாங்கால மட்டும் தொங்கப்போட்டு, சோத்தாங்கால மடிச்சிகிட்டு வெட்ட வெளியில ஒக்காந்திருந்த

எல்லக் கறுப்பன் சிலை, கலர் கலரான சீரியல், ட்யூப்லைட் வெளிச்சம் பட்டு மினுங்கி மினுங்கி அந்த ராத்திரி நேரத்துல பாக்க கம்பீரமா இருந்துச்சி. இந்த வருசம் சிவப்புப் பெயிண்டுக்கு ஆன செலவு டெய்லர் திருமூர்த்தியோட உபயம். வழக்கம் போல் பெயிண்ட் அடிச்ச சண்முகத்துக்கு வேலை முடியும் வரை கிடைச்ச கூலி, தெனமும் ஒரு மரத்துக் கள்ளும், கருவாட்டுத் தொக்கும். சாமி வேலைக்கு கூலியா காசு பணம் வாங்கறதில்ல அவன்.

கற்பூர வாசனையும், சாமந்திப் பூ வாசனையும், கொத்துக்கொத்தா சொருகி வெச்ச ஊதுபத்தியில இருந்து அலைஞ்சி அலைஞ்சி மேல வந்த புகையோட கலந்து நோம்பிய வாசமா ஆக்கிட்டிருந்திச்சி. கறுப்பனார் செல காலடியில குவிஞ்சி கெடந்த அரளிப் பூ அந்த கலர் கலர் லைட் வெளிச்சத்துல நெருப்புக்குவியலா கிடந்தது. பூப்போட்டாச்சு

“அடுத்து பந்தம் புடிக்கறவங்கலாம் வந்து வாங்கிக்கங்க..”

எல்லோருக்கும் அதே பச்சக் கர பருத்தித் துண்டு.

அடுத்த ஞாயித்துக்கெழம பொங்க வெச்சி முப்பூச போடற வரைக்கும் இந்த எல்லைக் கறுப்பனார் கோயில் பக்கம் ராத்திரி பகலா செகசோதியா இருக்கும். பூப்போட்டு தொடங்குற இந்த நோம்பியில எப்பவும் மொத மருவாதி பறையடிக்கிற மக்களுக்குதான். கடைசியா தர்மகர்த்தா தலையில பட்டு ஜரிகத்துண்ட பரிவட்டமா கட்டிவிட்டார் பூசாரி. அடுத்து விடிய விடிய ஆட்டம்பாட்டத்தோட சப்பர ஊர்வலம்

நகரமும் ஆக முடியாம, கிராமமாகவும் இருக்க முடியாம அல்லாடுகிற அந்த ஊரோட எல்லா தெருவுலயும் உற்சவரு சப்பரத்தில் ஊர்வலமா போகப்போறாரு இப்போது. அஞ்சடி ஒசர கறுப்பனார் உற்சவரு பூ ஜோடணையோட சப்பரத்துல உட்கார்ந்திருக்காரு கம்பீரமா. எல்லாத் தெரு வழியாவும் போயிட்டு கடைசியா கடைவீதி தாண்டியிருக்கும் பெரிய வேப்பமரத்த மூனு சுத்து சுத்திட்டு மறுபடி கோயிலுக்கே திரும்பிடும் சப்பரம். வேப்ப மரத்துக்கு அந்தப் பக்கம் குடிசையும் கூரையுமா இருக்கற சேரிக்குள்ள தான் முனியனின் ஓட்டு வீடு இருக்கு.

அந்த வேப்பமரத்தடில எப்பவும் யாரோ ஒரு சனம் குந்திட்டு தான் இருக்கும். ஊர்ல யார் வூட்ல எழவு வுழுந்தாலும் மொத தகவல் இந்த வேப்பமரத்தடியில இருக்கற யாரோ ஒருத்தருக்கு வந்து சேந்துடும். அடுத்த நொடி சேதி முனியனுக்குப் போயிடும். ஒடனே மரத்தடிக்கு வந்து தலப்பொகையிலய கிள்ளி வாயில கொதப்பிக்கிட்டு மரத்தோட ஒட்டி ஒட்காந்து கெடப்பாரு முனியன். எழவு வூட்டு ஆளுங்க வந்து மோள தாளத்துக்கும், பந்தல் போடவும் சொல்லிட்டுப் போனதும் ஆளுங்கள கூட்டிட்டுக் கெளம்புவாரு.

முனியனோடு சேர்ந்து பறையடிச்சிட்டுருந்த சுந்தரம் முனியனோட காது பக்கமா வந்து “அன்பு எப்ப வரான் மாமோய்” என்று கத்தினான்.

சுதி குறையாம அடிச்சிக்கிட்டே “விடிஞ்சதும் வந்துடுவாப்ல மாப்ள” என்றார் முனியன்.

பறையடிக்கு விசிலடிச்சபடி இளசுகளும், கள் குடிச்ச பெருசுகளும் ஆடிக்கொண்டிருக்க விசில் சத்தத்தோடு சப்பரம் கிளம்பியது.

அவனை இறக்கிவிட்டுட்டுப் பேருந்து நகரும்போது இருட்டும், வெளிச்சமும் கை கோர்த்து நின்னுட்டிருந்ததுங்க. வருசமாச்சு ஊருக்கு வந்து. கடைசி வருசம் இண்டன்ஷிப்ங்கறதால ஊருக்கு வர தோது இல்லாம போச்சு. தோள்ல தொங்கற பையும், கையில இருந்த ரெண்டு பொட்டியும் ஹாஸ்டல்ல இருந்த எல்லாப் பொருளையும் அடுக்கிக்க போதுமானதா இருந்துச்சி.

நாலாப்பக்கமும் சுத்திமுத்தி பாத்தான் அன்பரசு. கண்ணுக்கெட்டுன தூரத்துல கறுப்பனார் கோயில் லைட் வெளிச்சம் அந்த இருட்டு விலகற நேரத்துல நல்லாவே தெரிஞ்சது. இப்படியே இந்த ரோட்ல நடந்து போனா ஒரு அஞ்சு நிமிசத்துல கறுப்பனார் கோயில் வந்துடும். கோயில்கிட்ட போகும்போது பளபளன்னு விடிஞ் சிடும்னு தோணுச்சி அவனுக்கு.

ரெண்டு எட்டு எடுத்து வெச்சி நடக்கத்தொடங்கியதும் அன்புவுக்கு தன் அம்மாவோட நெனப்பு வந்ததுல பெரிய ஆச்சரியமில்ல. ஆயா வூருக்குப் போயிட்டு திரும்பி வந்து இந்த ரோட்ல அம்மாவோட கையப்புடிச்சி நடந்துபோனது தான் கடைசி. அப்ப அவன் பத்தாம் வகுப்பு படிச்சிட்டு இருந்தான். போற வழியில திடீர்னு வயிறு வலிக்குதுன்னு சொல்லிக்கிட்டே எப்படியோ வூடு வரைக்கும் வந்து சேர்ந்தாச்சு. வூட்டுக்கு வந்த கொஞ்ச நேரத்துலயே துடிக்கத் துடிக்கச் செத்துப்போனாள் அம்மா. என்ன நோய்னே தெரியல. சட்டுபுட்டுன்னு எல்லாம் முடிஞ்சது. ஒருவேள அம்மா அப்படி திடுதிப்புன்னு சாகாம இருந்திருந்தா அன்பரசுக்கு டாக்டருக்குப் படிக்கணும்னு யோசிச்சிக்கூட இருக்கமாட்டான்.

அம்மா செத்ததால அந்த வருசம் பத்தாவதுல ஃபெயிலாகிட்டான். ஆனா பொறவு தான் ஒரு குறிக்கோளோட படிக்க ஆரம்பிச்சான். பத்தாவது பாஸ் பண்ணி, பன்னெண்டாப்புல மாவட்ட அளவுல மொத மார்க் வாங்கி, எம்பிபிஎஸ் படிப்புலயும் பல்கலைக்கழக அளவுல தங்கப்பதக்கம் வாங்கி, இப்ப இண்டர்ஷிப்பும் முடிச்சாச்சு. இந்த ஊர்ல, இந்த சேரில இருந்து டாக்டருக்குப் படிக்கறது லேசுப்பட்ட காரியமில்ல.

கோயில தாண்டும்போது ஓரளவு விடிஞ்சிருந்தது. மைக் செட் காரன் கோயில்

வாசல்ல போட்டிருந்த பந்தலுக்கடியில தனியா தூங்கிட்டு இருந்தான். ஒதுங்கி நின்னுட்டிருந்த சப்பரத்துல கறுப்பனார் மேல போட்டிருந்த பூ மாலையெல்லாம் வாடிப்போயிருந்தது. காலை நேர பறவைகள் ஓலமும், உட்கார்ந்திருந்த கறுப்பனார் சிலை மேல் உட்கார்ந்திருந்த காகமும் அந்தத் தனிமையான காலை நேர விடியலுக்கு துணையா இருக்கறதுபோல தோணுச்சி அன்பரசுக்கு. அவனுக்குமே அந்தத் தனித்த சூழலுக்கு அந்தப் பறவைகள் எதோ ஒரு உற்சாகத்த கொடுக்கற மாதிரி இருந்துச்சு.

பீச்சாங்கைப் பக்கம் திரும்பியதும் சப்பரத்தோட சக்கரங்கள் போய் வந்த தடம் வீதியில் அப்பியிருந்தது. கோலம் போட்ட வாசலும், பெண் பிள்ளைகள் கோலம் போட்டபடியிருக்கும் சில வாசல்களுமாக அழகாக இருந்த அந்த வீதி நெடுக ட்யூப்லைட்கள் வரிசையாக எரிஞ்சிக்கிட்டிருந்திச்சி. இந்தத் தெருவுல நடந்து போறதெல்லாம் சாதாரண விசயமா இருந்ததில்லன்னு தாத்தா சொல்ல கேட்டிருக்கான். வீதி கடைசிக்குப் போய் வலது பக்கம் திரும்பினா தேரடிவீதி.

தேரடி வீதிக்குள்ள நுழையும்போது ஒரு சில பூக்கடைகளும், டீக்கடைகளும் திறந்திருந்திச்சி. இதுலயே நேரா போய் மறுபடி இடது பக்கம் திரும்பினா கடைவீதி. கடைவீதி போறவரைக்கும் வீதியோட ரெண்டு பக்கமும் எதிரெதிரா சின்னச் சின்ன தெருக்கள்.

சப்பரத்து சக்கரத் தடங்கள் வழியெங்கும் அப்பிக்கிடந்ததைப் பார்த்தபடி நடந்துகொண்டிருந்தான் அன்பு. சைக்கிள்கள் போவதும் வருவதுமாக இருந்தது. இரவு வந்த பயணக் களைப்பு கண்ணுல இருந்தாலும் வருசம் கழிச்சி சொந்த ஊருக்கு வந்து இந்தத் தேரடி வீதியில நடக்க நடக்க அந்தக் களைப்பு அன்புவோட நெஞ்சுக்குப் போகல.

அம்மா செத்தப்பிறகு அப்பா சோறாக்கக் கத்துக்கொடுத்ததெல்லாம் ஞாபகத்தில் வந்தது அவனுக்கு. அவரோட பொழப்பு எழவு வூட்டுக்குப் பறையடிக்கப்போறது, பந்தல் போட போறது, கீத்துப் பின்ன போறது இதெல்லாம் தான். இந்தப் பொழப்புத்தனத்துல இருந்து தான் படிப்புச்செலவுக்கு பணம் அனுப்புவாரு அப்பா. மாவட்ட அளவுல மொத மார்க் வாங்கியதால பெரிய அளவுல படிப்புக்கு பணம் தேவப்படல. பொஸ்தகம் வாங்க, தேர்வுக் கட்டணம் செலுத்த, வருச ஃபீஸ் கட்ட என அப்பா அனுப்பும் அனுப்பும் பணம் படிப்புச் செலவுக்குப் போதுமா தான் இருந்தது. லட்ச லட்சமா, கோடி கோடியா கொட்டி தன் மகன டாக்டருக்குப் படிக்க வெக்க முடியுமா இந்தப் பொழப்புத்தனத்துல இருந்து?

அம்மா செத்தப்பிறகு முனியனுக்கு ஒரே ஆறுதல் தன் மகன் அன்பரசு டாக்டருக்குப் படிக்கப் போனது தான். இன்னொரு கல்யாணம் பண்ணிக்க நெனச்சிக்கூட பார்க்கல அவரு. அதிலும் அன்பரசுக்கு டாக்டர் சீட் கெடச்சி காலேஜ் போன பிறகு அத நெனச்சி நெனச்சே பூரிப்பாகிவிடுவாரு.

இடது பக்கம் திரும்பியதும் கடைவீதி. எல்லா கடைகளும் திறக்கப்பட்டுக்கொண்டிருந்தன. புதுசா மொபைல் கட வந்திருக்கே. இங்க முன்ன என்ன கட இருந்தது? ம்ம்ம்.. முன்ன அரிசி கட இருந்தது இங்க. பக்கத்துல ஒரு ஸ்டுடியோ வந்திருக்கு போல. பரவாலயே. கல்யாண பாத்திரங்கள வாடகைக்கு விடற கடை முன்னால் ஒரு நாலஞ்சி பேர் சேர்கள வண்டியில ஏத்திட்டிருக்காங்க. எதிர்ல மளிகைக்கடை. வழக்கம்போல கூட்டம். இதுதான் ஊர்லயே பெரிய மளிகைக்கடை.

கடைவீதியை நோட்டமிட்டபடி வந்த அன்பரசு இந்த ஒரு வருசத்துல ஊர்ல உண்டாகியிருக்கும் மாற்றங்கள மனசுக்குள்ளயே கிரகிச்சபடி வந்தான். கடைவீதியோட முடிவுக்கு வந்த போது " டேய் அன்பு...." என்ற குரல் வந்த திசையில் அந்தக் குரலுக்கானவனைத் தேடியது அவன் கண்கள். கடைவீதியின் கடைசியில் மும்முரமாக இயங்கிக்கொண்டிருந்த ஒரு டீக்கடையிலிருந்து வீதிக்கு வந்த ஒருவன் " அன்பு.. நாந்தான்டா.. எப்படா வந்த?" என்றபடி வந்தான் அன்புவின் மாமன் மகன் குமார். இருவரும் ஒரே வயசுக்காரர்கள்.

" குமாரு.. இப்பதான் டா பஸ்ஸ வுட்டு எறங்கி வந்துட்டு இருக்கேன். என்னடா கண்ணு ரெண்டு செவந்து கெடக்கு" என்றான் அன்பரசு.

" நம்ம கறுப்பனார் நோம்பியில்ல. நேத்து தானே பூப்போட்டாங்க. விடிய விடிய சப்பர ஊர்வலம். நாலர மணிக்கு தான் வூட்டுக்கு வந்தோம். படுத்தா தூக்கம் வரல்ல. ஒரு டீயாச்சும் குடிக்கலாம்னு வந்தேன். சரி சரி.. வா டீ சாப்டலாம்."

கடைக்கு வெளியவே நின்னபடி டீ குடிச்சபடி பேசிக்கொண்டிருந்த அன்பரசு டீக்கடைக்கு எதிரிலிருந்த ஒரு அடுக்குமாடி காம்ப்ளக்ஸ் கட்டடம் கண்ணில் பட்டுக்கொண்டே இருந்தது.

" அப்பறம் மாப்ள.. டாக்டராகிட்ட. மேற்கொண்டு என்ன செய்றதா திட்டம்?"

" மேல படிக்கணும்னு ஆச தான் டா. ஆனா, இப்போதைக்கு முடியாதே. நம்ம ஊர்லயே சின்னதா ஒரு ஹாஸ்பிடல் வெச்சிடலாம்னு நெனைக்கிறேன்."

" அப்படியே செய்டா மாப்ள.. புண்ணியமா போகும். இங்க சரியானபடிக்கு டாக்டருங்க இல்ல. பஸ்ஸேறி பக்கத்தூருக்கு தான் போக வேண்டியதா இருக்கு."

" சரி... இந்தக் காம்ப்ளக்ஸ் யாருது?" என்றான் அன்பு

" நம்ம தர்மகர்த்தா இருக்காருல்ல. அவரோட மகனுதுதான்."

" இந்த பில்டிங்ல எதாச்சும் இடம் காலியா இருக்கா?"

“ இரு விசாரிக்கறேன்” என்றபடி டீக்கடைக்காரரிடம் விசாரித்தான் குமார்.

“ உள்ள ரெண்டு கடை காலியா தான் இருக்காம். ஆஸ்பத்திரி வெக்க தோதா இருக்கும்னு சொல்றாரு”

“ அப்டியா.. அப்பாவோட போய் தர்மகர்த்தாகிட்ட விசாரிக்கணும்”

“ நோம்பிலாம் முடியட்டும். பொறுமையா போய் பேசிக்கலாம்.” என்றபடி இருவரும் கிளம்பியதும், அந்த காம்ளக்ஸ் தாண்டி அந்தப் பெரிய வேப்ப மரமும் அதனடியில் யாரோ சில வயசாளிகளும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

பங்களா வீடு. பெரிய கேட் திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்த முனியனும், அன்பரசும் வீட்டு வாசலில் போய் நின்றார்கள். கதவு பாதி திறந்திருந்தது. எட்டிப்பார்த்தால் உள்ளே ஓடாத டிவி பாதியாகத் தெரிந்தது. காலிங்க் பெல் அடிக்க அன்பரசு எத்தனிக்க, அவனது கையைப் பிடித்த முனியன் கண் இமைகளால் அவனை அமைதிப் படுத்தி அதே இடத்தில் நிற்க வைத்தார்.

“ ஐயா.. ஐயா.. “ குரல் கொடுத்துவிட்டு, “ அமைதியா இரு.. வருவாக” என்று அன்பரசுக்கு பதில் கொடுத்தார் முனியன்.

அஞ்சு நிமிசம் கழிச்சி தர்மகர்த்தா செல்போனில் பேசியபடி வீட்டுக்குள் உலாவுவது தெரிந்தது. பேசியபடியே வெளியே திரும்பிப் பார்த்தவர் முனியனைப் பார்த்து கையால் சைகை காட்டிக் காத்திருக்கச் சொன்னார்.

இங்கிருந்து பார்த்துக்கொண்டிருந்த இருவருக்கும் தர்மகர்த்தா எதோ பதற்றத்தில் இருப்பது போல தெரிந்தது.

பேசியபடியே கதவை முழுசா திறந்து வெளியே வந்த தர்மகர்த்தா “ சரி.. சரி.. சரி.. சரி.. சரி..” என்று சொல்லியபடியே இருந்தார். சட்டென்று, “ ஒரு நிமிசம் மாப்ள...” என்று செல்போனுக்குக் காத்திருக்கச் சொல்லிவிட்டு,

“ வா.. முனியா.. உன்ன தான் நெனச்சிட்டே பேசிட்டிருந்தேன். என் மகனோட மாமனார் காலமாகிட்டாரு. இப்ப தான் தகவல் வருது. நீ உடனே கிளம்பி அவரு வீட்டுக்குப் போயிடு.. தம்பி யாரு?”


“ என் மகன் தான் ஐயா”

“ அப்படியா.. சரி இவனையும் கூட்டிட்டு வந்துடு.” என்று சொல்லிவிட்டு மறுபடி செல்போனுக்கு, “ மாப்ள முனியன்கிட்ட சொல்லிட்டேன்” என்றபடி மறுபடி வீட்டுக்குள் நுழையப் போனார்.

முனியனும், டாக்டர் அன்பரசுவும் அங்கேயே நின்றுகொண்டிருந்தனர். ❑

◉ யாழ் எஸ் ராகவன்

# ஆரஞ்சுநிற யானையின் அறிவுரை



சங்கரி வீட்டு சேவல்
கூட வீட்டில் எட்டி பார்க்கவில்லை
நாளுக்கு நாலுமுறை வரும்
நாயை காணவில்லை

வெரசா போயிட்டு
இருக்கும்போது வெடுக்கென்று கையை பிடித்து
முகத்தை பார்த்து ஒரு டீ சாப்பிட்டு
போலாம் இல்ல
என்று நம்பிக்கையை வாங்கித்தரும் நண்பனை-
ப்பார்த்து தான் நாள் ஆயிற்று

ஆயுள் தண்டனை இருந்த ஒட்டகம் மனுஷ
மக்கள் பார்க்க வேண்டி பரோலில் வந்த
பொழுதுவெறிச்சோடிக் கிடந்த வீதியை
பார்த்துவிட்டு மீண்டும் பாலைவனம்
செல்ல ஆயத்தமானது

பழம் விற்கும் பாட்டியிடம்
பூவிற்கும் அக்காவிடம்
சில்லறை இல்லையினா இறங்குன கோபப்படும்
நடத்துனரிடம்

இதுக்கு எதுக்கு லக்கேசு
என மாராயபடும் பெருசுக்கு
கோளாறு சொல்லும் வயசாளுக்கு
வெத்தலைக்கு சுண்ணாம்பு
கொடுக்கும் கொண்டையம்மா அப்பத்தாவிற்கு


சாவுகிராக்கி வீட்ல சொல்லிட்டு வந்துட்டியா
என திட்டிக் கொள்ளும்
காரோட்டிக்கு

மிதிவண்டியில் சுக்கு காப்பி விற்கும்
அண்ணனிடம்
ஆட்டோ டியூ கட்ட முடியாமல்
கண்ணீரில் டீசல்
போடும் மாரிக்கு

இன்னும் வயிற்றில் காற்றை நிரப்பிக்
கொண்டிருக்கும் எல்லோரிடமும் பிரியங்களை
பரிமாறிக் கொள்வது
எப்போது .
தும்பிக்கை இல்லாமல்
அந்த ஆரஞ்சு யானை

எமக்காக ஆறுதல் சொல்லாமல் அறிவுரை
சொன்ன போது
சிலை ஆகும்போது காகம் பார்த்துக்கொள்ளும்
என்று சொல்லத் தோன்றியது..

◉ ந.கிருஷ்ணசிங்கம்



# அவனுக்கு அண்ணன்தான் தெய்வம்.

தவநாதனை. தேவம்.யு என்றும் அழைப்பார்கள். ''கோரானாத்'' தொற்றுக்காரணமாக தனது வீட்டின் அடித்தளப்பகுதியில் அவன் தனிமைப்படுத்தப் பட்டிருக்கின்றான். தனக்குச்சாடையான இருமல்வந்தது உண்மைதான். ஆனால் காய்ச்சல்வரவில்லை. எனினுமிது கொரானாத்தான் என்று அவனது மனைவியான மாலதி முடிவெடுத்து அவனுக்குக் கொடுத்துள்ள சிகிச்சைதான் இதுவாகும்.

அந்தவீட்டில் அவள் போட்டதுதான் சட்டம். அதற்குட்பட்டு நடந்தால் நல்லது. அல்லது இடர்பாடுதான். வீட்டுப் பணிப்பெண்தான் இப்பொழுது அவனின் பராமரிப்பாளராக நியமிக்கப் பட்டிருக்கின்றாள். அவளைப்பார்த்து, உனக்குப் பயமில்லையா கொரணாவுக்கு. என்று அவன் கேட்ட போது, பயம்தான் ஆனால் ஏழைகள்நாங்கள் வெளியேவராமல் வீட்டிலேயிருக்க முடியுமா. மாலதியம்மா தினமும் அரிசி பருப்பு முதலான எல்லாம் எனக்குத் தருகின்றா. எனது சம்பளத்தையும் பிரித்துத் துத்தருகின்றா. இவற்றையெல்லாம் பெற்றுக் கொள்வதால்தான் எங்கடை வீட்டிலை சாப்பாடு வேகின்றது. அல்லாவிட்டால் எல்லாரும் பட்டினியாத் தான் கிடக்கவேணும். என்ரையவர் நாட்கூலி வேலைக்குப் போகிறவர். அவர் வேலைசெய்த கடையெல்லாம் இப்பபூட்டிக்கிடக்குது.

ஐயா! உங்கடையண்ணர் அருமைநாதர் முதலாளியார் நேற்றைக்கு உங்கடை வீட்டுக்கு சமையலுக்குத் தேவையான அரிசிபருப்பு முதலானசாமான்களை

அனுப்பியிருக்கிறார். இறைச்சி மீன் இறாள் என்றும் எல்லாம் வந்திருக்கு. ஆறேளு மாதத்துக்கு அவயாவும்காணும். எல்லாத்தையும் நானும் மாலதியம்மாவும் அந்தந்த இடத்திலை பக்குவப்படுத்தி வைச்சிட்டடம். அவர் வலுநல்லமனிசர். என்றவள் கூறவும்,

கண்கள்கலங்கவே தவம் கையெடுத்துக்கும்பிட்டடான். அண்ணன் தனக்கு ஊன்றுகோலாக இருந்து உதவுவதையெண்ணி அவன் உருகாதநாட்களே இல்லையெனலாம். அவரின்கடையில்தான் அவன் வேலைசெய்கின்றான். இந்தவீட்டையும் அவர்தான் வாங்கிக்கொடுத்தவர். தனது நெருங்கியநண்பர் பரஞ் சோதியின் மூத்தமகள் மாலதியை அவனுக்குக் கலியாணம் செய்துவைத்தவரும் அவர்தான். அத்தோடு மாலதிக்குத் தன்கடையில் வேலைகொடுத்து அவளைக் கௌரவமாகவே வாழவைத்தவர்.

"அருமைநாதன் ஆடையாபரணமாளிகை" என்னும் நாமம்பூண்ட அந்தக்கடையானானது மிகவும் பிரசித்திபெற்றதொரு நிறுவனமாகும். கடையின்மேல்மாடியில் அவரின் வீடு அமைந்திருக்கின்றது. அவருக்கு அன்பான மனைவியும் இரண்டு ஆண்பிள்ளைகளும் உண்டு. மூத்தமகன் முகுந்தன் தனது மேற்படிப்பைத்தொடராது நிறுத்திக்கொண்டு அந்தக்கடையின் மேலாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றான். அவன் மிகவும் கண்டிப்பானவன். அவனுக்கும் தவத்தின் மனைவியார் மாலதிக்கும் ஒத்துவருவதில்லை. இதனால் அவள் தினமும் முகுந்தனோடு முரன்பட்டுக்கொள்வாள். கோபங்கனன்றெரிய அவனோடு தர்க்கிப்பாள்.

தனது தந்தையார் பரஞ்சோதியின் சொத்தும் உழைப்பும் இந்தக்கடையின் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளதாகவும், அவர்நோய்வாய்பட்டு முடங்கியதாலை தனது நியாத்தை ஏற்பாருமில்லை எங்களின் முதலீடுபற்றி ஒருதகவலுமில்லை. என்று அவள்கூறவே, சினந்தெழுந்த முகுந்தன் வாதிடவிரும்பாது "அன்ரி! இவைகுறித்துக் கட்டாயம் அப்பாவோடைபேசுவோம். பேசிமுடிவெடுப்போம். வியாபாரம்நடக்கிறவேளை இந்தவிடத்திலை சச்சரவுவேணாம் தயவுசெய்து பொறுத்தக்கொள்ளுங்க." என்றுகூறி அவளையடக்கி அமைதியை நிலைநாட்டினான். அன்றுமுதல் மாலதி கடையில் வேலைசெய்வதை நிறுத்திக்கொண்டாள்.

மாலதி! நீர்செய்தது துண்டாய்ச்சரியில்லை. அண்ணரிடம் மன்னிப்புக் கேட்கவேணும். கடைவேலையைத் தொடரவேணும். என்று தவம் கண்டிப்பாகச் சொன்னபோது, கோபத்தோடு துள்ளியெழுந்தவள், அந்தச்சின்னப்பயல் எந்தநேரமும் என்னைச் சந்தேகமாகப்பாப்பதும் கண்டபடிபேசுவதும் எனக்குப்பிடிக்கவில்லை. என்ரையப்பர்தனது உண்மைநண்பன்அருமைநாதன் என்றுகருதிக் காலமெல்லாம்மவர் இவரோடிணைந்து பாடுபட்டதிற்கு அவரின்மகளான எனக்குயிதுவேணும்.

நான் இந்தநாட்டிலை பிறந்துவளர்ந்து படித்தவள். முகுந்தன்னின்ரை

தகுதியெல்லாம் எனக்குமுண்டு. நான் வேறையெங்காவது வேலைதேடிக்கொண்டு போவேனேதவிர கொண்ணற்றை கடையிலை இனியென்ரை கால்படாது. என்று சபதமுரைத்தவளின் வார்த்தைகள் வெற்றிபெறவில்லை. கடைகடையாக ஏறியலைந்தவளுக்கு வேலைகிடைக்கவில்லை.

திக்பிரமைபீடித்தவளாகத் தினமும்தனக்குள் சினம்பொங்கப்பேசிக்கொள்வாள். அவளுக்குக் கிட்ட நெருங்கும் பிள்ளைகளையும் காரணமின்றியே கடியவார்த்தைகளாள் வைதுகொள்வாள். தான் சகலதகுதியுமுடையவள் தனக்கு எல்லாம்முடியுமென்ற அதீதமான சுயநம்பிக்கையால் அவள் அவதியுறுவதை தவம் அறிந்திருந்தபோதும் அவளோடுபேசத்தயங்கினான். அமைதியும் அன்பும்நிறைந்த அவனின் குடும்பவாழ்க்கையானது விரக்திநிரவிய விடிவற்றவேதனையாகியது. இவற்றைச் சகிக்கமுடியாது சாந்தமான குரலில் அவன் பேசத்தொடங்கினான்.

மாலதி! உமக்குக் கொண்டாட்டங்களுக்குக் குறைவில்லை. புதிசுபுதிசாய் உடுப்புகளையும் நகைகளையும் உம்மடை எண்ணத்திற்கு கடையிலிருந்து எடுத்துக்கொண்டு சம்பளக்கணக்கிலைகழியுங்க! என்றுநீர்சொல்லிவிட்டுவருவது எப்பவும் தொடர்ந்ததாலைதான் முகுந்தன் கோபமடைந்தவன். உம்மடை சம்பளத்தையுந்தாண்டி நீரெடுக்கும் உடுப்புகளின்ரைவிலைகள் எங்கையோ போகின்றன என்றதாவது உமக்கத்தெரியுமா. ஒரு வேலைத்தலத்திலே பணியாற்றுபவர்கள் இப்படியெல்லாம் செய்யலாமா."

அவன் தன்னாலானவரைமுயன்று எடுத்துக்கூறியும் அவள்தன் அகங்காரப்பேச்சை நிறுத்துவதாயில்லை. அவன் எப்படிக்கெஞ்சியபோதும் ஏற்காதுமறுப்புரைத்துப் பிடிவாதம்செய்தாள். கோபம்கொண்டு அவன் கத்திப்பேசவும் அவளும்இரைந்து எதிர்வாதமிட்டாள். இரணகளமாகமாறிய வீடைக்கண்டு பிள்ளைகள் பயந்துநடுங்கினார்கள் தாயையும் அவனையும் ஏங்கியவிழிகளோடு அழுதவண்ணம் அரவணைத்து அவர்கள் அமைதிப்படுத்த முயன்றபோதும் அதுமுடியாதுபோகவே உரத்ததொனியில் கத்தினார்கள்.

காலமுருண்டது. இன்றோ கொரணதாக்கியுள்ளாதாக குற்றம்சுமத்தி மாலதி அவனைத் தனிமைப்படுத்தியுள்ளாள். தனக்குப்பெரிதாக எதுவும்நோய்த்தாக்கம் இல்லையென்பதை எடுத்துக்கூறும்தைரியம் அவனுக்கு வரவில்லை. தற்செயலாகத் தன்னால் கொரனாநோய் வேகங்கொண்டு எல்லோரையும்தாக்கினால் அதைத்தாங்கமுடியுமா என்றஏக்கம் அவனைத்தடுமாறவைத்தது. தினமும் தனிமையில்கிடந்து பலதையும் நினைப்புலம்புவதும், அண்ணரோடு தொலைபேசியில் உரையாடுவதும் அவரின் ஆறுதல்வார்த்தைகளால் மனமாறிஓய்வதுமாக அவனின்காலங்கள் கரைந்தாலும், இரவில் நித்திரையின்றிப் புழுபோலற்கிடந்து உருண்டுஉழல்வான்.

தனது இரண்டு பெண்குழந்தைகளின் எதிர்காலங்கள்குறித்தும், தான் இறக்கநேரின் அவர்கள் அலைந்துபோவார்களேயென்றும் எண்ணிக் கண்ணீர் வடிய வருந்துவான். தான் பட்டுள்ள கடன்களுக்கு முதற் காரணமானவள் மாலதி தான் என்று அவனது மனம்குற்றம்சுமத்தும். அவளின்; ஆடம்பரத்தேவைகளப் பூர்த்திசெய்வதற்கு மு டி ய ா த வ ன ா க த் தி ண் ட ா டு ம் பொழுதெல்லாம் அண்ணண் அருமைநாதன் தன்னாலான மேலதிகவுதவிகளைத் தொடர்ந்து வழங்கி வந்ததால் இவ்வளவு காலமும் அன்றாட வாழ்கையானது மந்தகதியில் சென்றது. இன்றோ கொரனாவால் அதுவோர்திட்டில் மோதுண்டு துயரச்சகதியில் சிக்குண்டுதவிக்கின்றதே. என்றெல்லாம் அவன் ஏங்கிகுகின்றான். அவனது தொலைபேசி சிணுங்கவே, அதில் அண்ணன் அருமைநாதன் வீடியோதிரையில்தோன்றி உரையாடினார். நம்பிக்கை தந்தார். தெம்பு கொடுத்தார். அச்சம்தவிர்தார். அமைதியை வழங்கினார். நிம்மதியால் மனம்நிறையவைத்தார்

தேம்பி! மாலதிக்கும் உனக்கும் சம்பளக்காசு அனுபியுள்ளேன். அத்தோடை உன்னுடைய வங்கிக்கடன்முழுவதையும் நான் கொடுத்துவிட்டடன். உனக்கு மன நிம்மதிதான் இப்பொழுது முக்கியம். நீயினியெதைப்பற்றியம் நினைத்துக் கலங்காதை சந்தோசமாய்யிரு!" என்று கூறிவிட்டுத் தனது தொலைபேசித் திரையில் சிரித்தவாறு விடைபெற்றார். அவர் அவனுகுத்தெ தய்வம். அவரைப் புரிந்துகொள்ள மாலதிக்குத்தான் மனவளர்ச்சி போதவில்லை.

❑



◉ தங்கேஸ்

# கையேந்துவது

பல்லடுக்கு மாலுக்குள்
குழந்தைகளோடு பீட்சா பர்க்கர்
உண்டு
குளிர்பானம் அருந்தி
புன்னகையுடன் வெளியேறும்
போது வாசலில்
எலும்புக்கூட்டுக்கு
தோல்போர்த்திய உருவமாய்
கையேந்தியபடி நிற்கும் மூதாட்டி
அச்சு அசலாய் ஊரில்
தொலைத்துவிட்டு வந்த
பெரியம்மாவின் முகம்
பையில் மீந்திருந்த அத்தனை
நாணயங்களையும்
அந்த நடுங்கும் கரங்களுக்குள்
திணித்து விட்டு
அவசரமாக அவ்விடம் அகன்றவன்
ஏதோ உந்தித்தள்ள மீண்டும்
மூதாட்டியிடமே வந்து
கைகளை ஏந்தியபடிய நிற்கிறேன்

❑

◉ பிரியா வெங்கடேசன்,
மேல்சீசமங்கலம்.

# அஸ்திவாரங்களின் கனவுகள்


*என்*
*முதல் சம்பளத்தைத் தன்*
*கடைசிக் காலத்திலாவது*
*பார்த்திடத் துடிக்குமென்*
*பெற்றோருக்கெப்படிப்*
*புரியவைப்பேன்..,*
*'அரசு வேலை பெறத்*
*தகுதி மட்டும் போதாழ்தென்று..?!*

*'கருணையடிப்படையில்*
*பணி நியமனமென்கிறார்களே..,*
*நானிறந்தால் ஒருவேளை..,*
*உனக்குக் கிடைக்குமோ*
*ஒரு வேலை..?!ழ்*
*என்ற என் தந்தையிடம்,*

*'அதற்கும்கூட*
*நம்மிலொருவர்*
*அரசுப்பணியில்*
*இரு(ற)ந்திருக்க வேண்டுழ்மென்கிறாளெ*
*தாய்..!*

*"அப்படியெனில் எனக்கொரு பணி*
*கொடுங்கள்..,*
*கருணையடிப்படையிலாவது*
*என்மகனுக்குப்*
*பணி கிடைக்கட்டும்.."*
*என்கிறாரென்*
*அப்பாவி அப்பா..!!*





◉ மலர்மதி

# தாயின் அறிவுரை

கோபு தன் தாய் எதைச் சொன்னாலும் கேட்கவேமாட்டான். வீட்டு வேலை ஆகட்டும், தாயின் புத்திமதி ஆகட்டும், எதையும் காது கொடுத்துக் கேட்காமல் நண்பர்களுடன் விளையாடப் போய்விடுவான்.

பள்ளியில் ஒன்றாகப் படிக்கும் சக மாணவர்களுடன் ஒன்றுகூடி ஏரியில் மீன் பிடிப்பது, மாந்தோப்பில் மாங்காய்த் திருடுவது, மைதானத்தில் கிரிக்கெட் விளை யாடுவது, ஊர் சுற்றுவது போன்ற பல வீண் செயல்களில் நேரத்தை விரயமாக்குவதே அவனுடைய பொழுதுபோக்காக இருந்தது.

படிப்பிலாவது கவனம் செலுத்துகிறானா என்றால் அதுவும் இல்லை. இவன் போக்கில் இவனை இப்படியே விட்டால் இவனுடைய வாழ்க்கையே வீணாகப் போய்விடுமே என்று அவன் தாய் கவலைப் பட்டாள்.

தாயின் அறிவுரையை அவன் இதுவரையில் செவி சாய்த்துக் கேட்டதே இல்லை.

அன்று வீட்டின் பின் தோட்டத்தில் அமர்ந்து கோழிக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தான் கோபு.

கோழி தன் குஞ்சுகளுடன் இரையைக் கொத்தித் தின்றுக்கொண்டிருந்தது.

அப்போது வானத்தில் பருந்து ஒன்று வட்டமிட ஆரம்பித்தது.

அதைக் கண்ட தாய் கோழி, "கொர்ர்ர்ர்ர்.." என சத்தமிட்டு தன் குஞ்சுகளை எச்சரித்தது.

தாயின் எச்சரிக்கையைக் கேட்டு குஞ்சுகள் ஆளுக்கொரு திசையில் தாவிச் சென்று ஒளிந்துக்கொண்டன.

ஒரே ஒரு குஞ்சு மட்டும் தாயின் குரலுக்குக் கட்டுப்படாமல் தீனி தின்பதில் குறியாக இருந்தது.

அடுத்த கணம் -

ஒரே பாய்ச்சலில் தன் கூரிய பாதங்களில் அந்தக் குஞ்சைக் கவ்விக் கொண்டு பறந்தது அந்தப் பருந்து.

தாய் கோழி பறந்துச் சென்று குஞ்சைக் காப்பாற்ற முயற்சி செய்தது.

"உஷ்.. உஷ்.." என்று கூவியவாறு கோபுவும் பருந்தை விரட்டினான்.

ஒரு பிரயோஜனமுமில்லாமல் போயிற்று.

குஞ்சைக் கவ்விய பருந்து மிக உயரத்தில் பறந்து காணாமல் போனது.

தாயின் அறிவுரைக் கேட்டு ஓடி ஒளிந்துக்கொண்ட குஞ்சுகள் பத்திரமாக இருந்தன. தாயின் பேச்சை உதாசீனப்படுத்திய குஞ்சோ பரிதாபமாய்த் தன் உயிரைப் பறிகொடுத்தது.


தன் கண் முன்னே நிகழ்ந்த அந்த சம்பவம், கோபுவைப் பெரிதும் பாதித்தது.

தாயின் பேச்சைக் கேட்கவில்லை என்றால், பெரிய ஆபத்தில் மாட்டிக் கொள்வோம் என்பதை உணர்ந்தான்.

இனி, அம்மா சொல்வதுபோல் கேட்டு ஒழுங்காக நடந்துக்கொள்ள வேண்டும் என உறுதியாகத் தீர்மானித்த கோபு, அதை தன் நண்பர்களுக்கும் விளக்கிச் சொல்லவேண்டும் என முடிவு செய்தான்.

❑

◉ கவிஜி



# கொண்டிகளற்ற ஜன்னல்

திறந்திருக்கும் இறகொன்றில்
கொண்டிகளற்ற ஜன்னலை
கூடாக்கி பார்க்கிறேன்

எல்லாம் செவ்வகமென
இல்லையில்லை சதுரமென
சூழ் வினை புரிந்து
ஆழப் பழகும் எதுவொன்றாய்
எந்த எல்லைகள் வெகு அருகில்

சுவர் உடைக்கும் உள் புகுந்தவை
நிறைமாத வெயிலுக்கும்
நின் பகலென மழைக்குமான
பின் அந்தி வண்ணத்தில்
சிறு பனியும் கண்டவைதான்

இலையுதிர் எதற்கும் இருக்கட்டும்
என எட்டும் விழிகளில்
எட்டாவது விதியுகமாக

தூர வீசி விடும் உயிர் நரம்பின்
மீட்டலில் பிணமெனவும்
இருப்பதில் எட்டி எட்டி பார்க்கும்
உடலே மந்திரம்

சுற்றும் முற்றும் சுகமென
கடிக்கும் சுந்தர புன்னகை
எனக்கும் என்னை நிமிண்டும்
ஜன்னல் கம்பி எறும்புக்கும்

எதை எதையோ நினைத்து விட்டு
ஏனோதானோவென
வாய் பிளந்து தூங்குகிறேன்
பிறகெதற்காவது தோன்றும்
என் கனா முன் களைதல் என

எதுவுமற்று இருப்பதெல்லாம்
அப்படியா..! ❑



◉ ப.தனஞ்ஜெயன்

# மாயக்காற்று

சில ஆண்டுகளுக்கு முன் கிராமத்தை விட்டு நகர வாழ்க்கைக்கு சென்ற நடராஜன், அடிக்கடி சொந்த ஊருக்கு வருவதில்லை , அவனுக்கு இருந்த இரண்டு ஏக்கர் சொந்த நிலத்தையும் பம்ப் செட்டையும் குத்தகைக்கு விட்டுவிட்டான். தண்ணீர் வாரம் ,நிலத்திற்கும் சேர்த்து ஏக்கருக்கு எட்டு மூட்டை என குத்தகைப் பேசி

விட்டிருந்தான். பயிர் வைத்திருந்த செல்வம் நகரத்திற்கு செல்லும் வேளையில் குத்தகையை கொடுத்துவிட்டு வருவதால் சொந்த ஊருக்கு வர வேண்டிய வேலை அதிகமாக இல்லாமலேயேப் போனது நடராஜனுக்கு .

வாழ்வு ,சாவு என்றால் போய்த்தானே ஆகவேண்டுமென்று தன் மனைவியை சமாதானப்படுத்தி விட்டு வருவது வழக்கம். அப்படித்தான் செல்வம் கொடுத்த தந்தியைப் பார்த்துவிட்டு சொந்த மண்ணில் கால் பதித்தான் நடராஜன். கிராமத்தில் தன் தெருவில் வசித்து வந்த நண்பனும் தன்னோடு இளமையில் படித்த பாலனின் மரணச் செய்தி அறிந்துதான் கிராமத்திற்கு வந்தான். அவன் வசித்த அந்த வீதியை

இருபுறமும் பாரத்தவாறே வந்தான்.பழைய மனிதர்கள் யாரையும் காணவில்லை. தெருவின் தொடக்கத்தில் மற்றொரு நண்பன் ஒருவனின் பழைய வீடு மட்டும் அப்படியே இருந்தது.அந்தக் கூரை வீடு சாலையில் இருந்து மிகவும் பள்ளத்தில் இருந்தது.

மேற்கூரை கீற்றினால் கட்டப்பட்டு அதற்கு அடியில் கரும்பில் இருந்து உறித்து எடுக்கப்பட்ட காய்ந்த சோலையால் அமைக்கப்பட்டிருந்தது.செங்கற்கள் கொண்ட சுவர், மண்ணும் சாணமும் கலந்து குழைத்து பூசப்பட்டிருந்தது.அந்த வீட்டில் தன் பால்ய நணபனைப் பார்க்கச் சென்றான்.

அந்த வீட்டில் வாயிற்படியில் அழகான பெண் குழந்தை ஒருவள் விளையாடிக்கொண்டிருந்தாள்.

சுற்றிலும் மண் தரையாய் இருந்தது வீட்டு கதவருகில் விளையாடிய அந்தப் பெண் குழந்தையிடம் ஊேன் பேரு என்னமா" என்றான் நடராஜன்.புதிதாக நடராஜனை பார்த்த அவள் அழத்தொடங்கினாள்.பயப்படாதே நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன் உங்க அப்பாவோடு படித்த நண்பன்தான் நான் என்றான்,அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"உன் பேரு என்ன?"என்று மீண்டும் கேட்டான். அதற்கு அவள் "எம்பேடு வடிடா"என்றாள்.என்னமா இன்னொரு முறை சொல்லு என்றவுடன்.ம்..வடிட்டா என்றாள் அழுத்தமாக.அவனுக்கு சிரிப்பு வந்தது.அதை வெளிக்காட்டினால் குழந்தை பேசாமல் நிறுத்திவிடும் என்று, "ஓ வனித்தா வா" என்றான்.அதற்கு அவள் தலையாட்டினாள்."அப்பா எங்க "என்றான்.

"அப்பா..ங் ..க.டோட்டத்தில" என்றாள்."ஓ அங்க தோட்டத்திலயா" என்று எட்டிப்பார்தான்,அவளும் தலையை ஆட்டினாள்.அப்பொழுது நண்பன் மோகன் வாயைக் கழுவி கொப்பளித்தவாறே என்னைப்பார்த்துவிட்டு" வாடா எப்பவந்த"என்றான்.அவன் மேலிருந்து சாராய வாடை வீசியது.காலையிலே அவன் மனைவி தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு சென்றுவிட்டாள் என கூறினான். வாடா மாப்பிளே இப்படி உட்கார் என்று ஒரு கோரைப்பாயை விரித்தான்.

வீடு முழுவதும் நான்கு சுவரும் குறுக்காக அதன் உட்புறத்தின் வாட்டத்தில் ஒரே ஒரு அரைசுவர் இருந்தது அந்த சுவர் மேற்கூரையை தொட்டிருக்க வில்லை .அந்த சுவற்றின் மேல் பள்ளிக்கூட புத்தகங்கள் மற்றும் சில பாத்திரங்கள் அடிக்கு வைக்கப்பட்டிருந்தது,மேற்பகுதி மூங்கில் கழிகளால் கட்டப்படடிருந்தது.ஒரு இரும்பு கட்டில் நிறைய பழைய துணிகள் கிடந்தது.இரண்டு பழைய வேட்டியில் துணிகளை அடைத்து தலைக்கு தலையணையாய் கிடந்தது.சாணத்தால் மொழுகியத் தரை ,ஒரு பக்கம் வரிசையாக எறும்புகள் சென்று கொண்டிருந்தது.ஆங்காங்கே

பாத்திரங்கள், சாப்பிட்டு அப்படியே கழுவாமல் தட்டுகள் இருந்தது,அவற்றை அப்படியே தரையில் வைக்கப்பட்டிருந்த கேஸ் அடிப்பில் எடுத்து வைத்தான்.ஒரு சொம்பை எடுத்து தவளையில் இருந்த தண்ணீரை கொஞ்சமாக அலசி அங்கிருந்தே வெளியே தண்ணீரை ஊற்றினான்.அதே சொம்பில் வழிய தண்ணீரை எடுத்து இந்தாடா மாப்பிளே தண்ணீர் என்றான்.நானும் வாங்கிக் கொண்டேன்.நீ மட்டும் தான் இந்த தெருவில் அப்படியே இருக்கிறடா மோகன் என்றதும்,என்னடா பன்னறது ஏதோ கிடைக்கிற வேலைக்கு போகிறேன்,வாரத்திற்கு இரண்டு நாள் மூன்று நாள் தான் வேலை,கிடைக்கிற பணத்துல கொஞ்சம் சாப்பாட்டிற்கு மீதம் எனக்கு என்று சொன்னான்.இந்த சுவர் வழியாக தெரியும் சந்திலிருந்து பெரிய பாம்புகள் தீடிரென்று வந்து செல்லும்,எல்லாம் பழகிப்போச்சுடா என்றான்.எனக்கு கொஞ்சம் பயம் கலந்த உணர்வாகவே இருந்தது,அப்படியே மேலேப்பார்த்தேன். பெரியப் பொண்ணு ஜான்சி ஆறாவது அரசு பள்ளியில படிக்கிறா.வனிதாவை இனிமேல்தான் பள்ளிக்கூடத்தில சேர்க்கனும் என்றான்.

நீ எப்படி இருக்கிற என்கிற வார்த்தையை அவன் கேட்கவே இல்லை.அதை அவன் ஏன் கேட்கவில்லை என்பதும் புரிந்தது.இப்படி வாழ்க்கையின் முன்னேற்றம் பற்றி பேசிக்கொண்டிருக்கும் நாம் நிறைய மனிதர்களையும் கவனிக்க மறந்துவிடுகிறோம்.

பேசிக்கொண்டிருக்கும்போதே அவன் கண்களில் இருந்து தாரைத் தாரையாகக் கண்ணீர் வழிந்தது,ஒன்றும் இல்லடா மாப்பிளே என்று தேம்பினான்.அந்த அழுகையை குடிகாரனின் அழுகை என்று எண்ணிக்கொள்வதா என்ற மனநிலையைத்தாண்டி அதில் துன்பங்கள் நிறைந்திருப்பதும் என்னால் யுகிக்கிமுடிந்தது.சரி விடுடா என்றேன்.

உடனே அவனுடைய கைலியால் முகத்தை துடைத்து கொண்டு மூக்கையும் அதிலேயே சிந்தினான்.

வெளியில் பறை சப்பதம் கேட்டுக்கொண்டே இருந்தது.

“தொம்..தொம்தொம் தாக்குதிக்கிட தொம்.. தொம்தொம் தாக்குதிக்கிட”

என்று கேட்டுக்கொண்டிருந்த ஒலியால் ஏற்பட்ட ஈர்ப்பில் வனித்தா நான் பார்த்தும் பார்க்காமல் இருந்ததை நான் கவனிக்கவில்லை என்று எண்ணியவாறே ஆடிக்கொண்டிருந்தாள்.

மோகனும் நானும் சாவு வீட்டிற்கு செல்ல, ஒரு பூ மாலை ஒன்று வாங்கிவர கடைவீதிக்கு சென்றோம்.அவன் இந்தமாலையை கட்டி முடிக்கட்டும் அதற்குள் வந்து விடுகிறேன் என்று ஒரு இருபது ரூபாய் கொடுடா மாப்பிளை என்று கேட்டு வாங்கி கொண்டு சாரயக்கடைக்கு விரைந்தான்.அங்கிருந்த பட்டாணிக்கடை

இல்லை,பழைய முனியான்டி விலாஸ் புதிய கட்டிடத்திற்கு மாறி இருந்தது,மண் ஜாடி செய்து கொண்டே பூச்செடி, மரக்கன்றுகளை விற்பனை செய்த கடையைக் காணவில்லை, உரக்கடை வைத்திருந்த செட்டியாருக்கு கஷ்டகாலத்தால் கடையில் சரக்கு இல்லாமல் அமர்ந்திருக்கிறார்.சுக்கு காப்பி சைக்கிளில் விற்பனை செய்யும் தாத்தா சின்னசாமி இறந்துவிட்டார் என்று கிராமத்து சூழலை அழகாக கண்ணன் தாத்தா வெற்றிலை பாக்கு விற்றுக்கொண்டே என்னிடம் பேசிக்கொண்டிருந்தா□□,அவரிடம் வெற்றிலைப்பாக்கு ,வத்தி பூ மாலையை வாங்கிக்கொண்டு நின்றிருந்தேன்.

என்னைப்பற்றியும் என் இறந்து போன தந்தையைப் பற்றி பழைய கதைகளை பேசிக்கொண்டே இருந்தார்,முன்பு இருந்ததைவிட கூட்டம் வீதியில் அதிகமாக இருந்தது.ஆனால் யாரிடமும் எங்கள் கிராமமண்ணின் வாசம் இல்லை அங்கிருந்த கண்ணன் தாத்தவைத் தவிர என்னிடமும் மண்வாசம் வெகுதூரம் விலகிப்போயிருந்தது.சற்று நேரத்தில் திரும்பி வந்தான் மோகன்.கிளம்புறேன் தாத்தா என்று விடைபெற்றேன்,போய்விட்டு வாப்பா ராசா என்று சொன்னார் தாத்தா.

இந்தாடா இந்த பிஸ்க்கட் பாக்ட்டை வனிதாக்கிட்ட கொடுடா என்றேன்,வலுகட்டாயமாக மாலையை என்னிடமிருந்து கையில் வாங்கிகொண்டான்.ஏன்டா அதெல்லாம் பணமா கொடுத்திருந்தாலே போதுமே என்று பிஸ்க்கட் பாக்கட்டை வாங்கிகொண்டான்.

கடை வீதியில் இருந்து எங்க தெருவின் கடைசியில் உள்ள சாவு வீட்டை நோக்கி நடந்தோம்.

ஒரு சிறிய பந்தல் போடப்பட்டிருந்தது,அதற்கு முன்பாக அமர்ந்து பறை இசைப்பவர்கள் குழு பறை அடித்தார்கள் மற்றொரு ஓரத்தில் பேண்டு இசை வாசித்தார்கள்,எங்களைப் பார்த்தவுடன் எழுந்து வந்து வரவேற்பது போல் அழைத்துக்கொண்டு சவத்தின் அருகில் விட்டது அந்தக்குழு.மீண்டும் திரும்பி வருவோம் என

எங்களை எதிர்பார்த்துகொண்டே வாசித்தனர்.

நானும் மோகனும் மாலையை சவம் வைத்திருந்த கண்ணாடி பெட்டியின் மேல் வைத்தவுடன்,என்னைப்பார்த்த பாலனின் மனைவி அண்ணே என்னோடு நிலைமையை பார்த்தியா என்று அந்தக் கண்ணாடி பெட்டியின் மேல் சாய்ந்தாள்,அவளுக்கு எந்த சமாதானமும் சொல்ல முடியாமல் கையெடுத்து கும்பிட்டு வந்த அழுகையை கடக்கடியாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறினேன். வந்த வேகத்தில் ஏங்க என்று தலையை சொறிந்தான் பறை வாசித்த குழுவில் ஒருவன். அவனிடம் சில்லறை ஐம்பது ரூபாயை எடுத்து கொடுத்தவுடன் சாமி என்று கும்பிட்டான்.எல்லாம்

மாறிப்போய் இருந்தது இன்னும் இது மட்டும் மாறாமல் அப்படியே இருந்தது.

ஒரு பக்கம் பேண்டு வாத்தியத்தில் அமைதியான நதியினிலே ஓடம் என்று சோகமான பாடல் ஒலித்தது.ஒரு ஓரத்தில் வயதான கிழவிகள் சிலர்

என் பெத்த ராசா

நீ எப்படியெல்லாம் வாழ்ந்த

கண் பட்டு காணாமல் போன

ஓம்பலால ஒடிஞ்சியே போன

சீமைசரக்க குடிச்சி வீரமா நடந்த

நாடு நகரம் திரிஞ்சி ராசா போல நடந்த

போன வாரம் கூட என்னை வந்து

பார்த்தியே என்று ஒப்பாரி வைத்தாள் கிழவி ஒருவள்.பக்கத்தில ஒருவள் மனுச உடம்பு சும்மா பொசுக்குனு சட்டிப்பானை மாதிரி உடைஞ்சு போயிடும்,நல்லாத்தான் இருந்தான்.ரெண்டு நாள் தான் உடம்பு சரியில்லைனு படுத்தான் ,என் ராசா போயிட்டான் என்று அழுதாள். மோகனும் அவனோடு சிலரும் டேய் ஒரு குத்துப்பாட்டு பாடுங்கடா என்று கேட்டவுடன் மீண்டும் பறையும் பேண்டும் துள்ளத்தொடங்கியது.உடனே ஒரு புதுப்பட பாடலுக்கு இரண்டு குழுவும் போட்டியாக மோதி மோதி அடித்தது.

மோகனும் ஆடத்தொடங்கினான் இசைக்கு ஏற்ப ஆடினான்.அனைவர் கண்களும் அந்த இசையையும் ஆட்டத்தையும் ரசித்தது, எழவு வீட்டு இசை ஏதோ ஒரு செய்தியை சொல்வதாகவே இருந்தது ஆனால் இன்று யாருக்கும் அது புரியவில்லை.

பூக்கள் மற்றும் மாலைகளை எடுத்து அங்கு வந்திருந்த வாகனத்தின் மேல் மாட்டினார்கள்,ஒரு புறம் ஐந்து குடத்தில் மாமர இலையையும் வேப்பிலையும் இட்டு தண்ணீர் எடுத்துக்கொண்டு தெரு முனையிலிருந்து நடந்து வந்தார்கள்.அந்த தண்ணீரால் சவத்தை கழுவினார்கள்,பாலனின் மனைவிக்கு புதுப்புடையை அணிவித்து நலங்கு வைத்தார்கள்,பாலனின் தலைக்கு எண்ணெய் வைப்பவர்கள் வைக்கலாம் என்று குரல் கேட்டது,புது வளையல்கள் பூட்டப்பட்டது ,தலைக்கு பூ வைத்து இருவரையும் குளிப்பாட்டினார்கள்.இந்த சடங்குகளை செய்த முதியவள் ஒருவள் இருவரையும் கட்டி அணைத்து பாலனுக்கு விடைகொடுத்தாள்.என் நண்பனின் பிரிவு என்னையும் சோகத்தில் ஆழத்தியது.காரணம் இலலாமல் நாம்

பிரியும் போது அதிகமாக வலிக்க செய்கிறது ,காரணங்கள் இருந்தால் கூட அது வலிக்கிறது.மெல்ல சவத்தை சவ ஊர்திக்கு அருகில் எடுத்து வந்து அந்த வண்டியில் இருந்த தகர படுக்கையில் பச்சை கீற்றோடு பாலனை படுக்கவைத்தார்கள்.ஒருவர் ஏம்பா பிணத்தின் தலைப்பகுதி இடுகாட்டைப் பார்த்தவாறுதான் வைக்கவேண்டும் வீட்டைப்பார்த்து வைக்கக்கூடாது என்றார்.உடனே அவ்வாறே மாற்றினார்கள்.அந்த வாகனத்தைப் பெண்களும் அவரது மனைவியும் கண்ணீரோடு மூன்று முறை சுற்றி வந்தார்கள்.இறுதியாக பெரிய கட்டியான கற்பூரத்தை ஏற்றினார்கள்.

வாகன ஓட்டியிடம் வண்டியை எடு,எடு என நிறைய குரல்கள் ஒலித்தது.

வாகன ஓட்டி வாகனத்தை ஓட்ட ஆரம்பித்ததும் பெண்கள் அனைவரும் ஒரே அழுகை.வாகனம் மெல்ல இடுகாட்டை நோக்கி வேகமாக நகர்ந்தது ,நானும் மோகனும் என்னடைய வண்டியில் வாகனத்தை பின் தொடர்ந்தோம்.மனிதன் அன்னியப்பட்டுதான் போய்விட்டான்,முன்பெல்லாம் கையால் பாடையைகட்டி சுமந்து சென்றது மனிதர்களுக்கு அன்பு நிறைந்ததாக இருந்தது,அதில் ஒரு ஆறுதலும் கருணையும் இருந்தது,அதுவும் மாறிப்போய்விட்டது ,மனிதனுக்கு இறுதி வரை எந்திரமான வாழ்கை தான் என்றும்,இந்த இறுதி நேர ஓய்வு கூட மாறிப்போய் விட்டதே என ஏங்கிய வாறேப் பின் தொர்ந்து சென்றான்.

மாற்றத்திற்கு ஆயிரம் காரணங்கள் சொன்னாலும் மனிதனின் நுட்பமான அன்புகள் மாறிவிடக்கூடாது என நினைத்தான்.நானும் எந்திரமான வாழ்கைக்கு என் நண்பனடமிருந்து விடைபெற்ற போது அவன் அரை மனதாகக் கிளம்பு மாப்பிளே என்றான்.நான் அவனைப் புரிந்து கொண்டேன்,அவனிடம் நூறுரூபாய் தாள் ஒன்றை கொடுத்தேன்.டேய் வீட்டுக்கு ஏதாவது வாங்கிசெல் என்றேன்.அவன் முகம் மகிழ்சியானது.செல்லும் வழியில் இறக்கிவிடு என்று இறங்கிகொண்டான்.வேக வேகமாக சாரயக்கடையைக் நோக்கி நடந்தான்,சவத்தை ஏற்றி சென்ற ஊர்தி என்னைத் தாண்டி அதற்குள் வேகமாகச் சென்றது.

நகரத்திலிருந்து அனைத்துமே வேகமாக வந்தடைந்துவிடுகிறது கிராமத்திற்கு என நினைத்தவாறே,தன்னுடைய சொந்த மண்ணை விட்டுப் புறப்பட்டான்,அவனை ஆவலாக அனைவரும் எப்படி இருக்கிறப்பா நடராஜா என்று நலம் விசாரித்த மனிதர்களை விட்டுப் பிரிவது சங்கடமாகத்தான் இருந்தது.நகரத்தில் பக்கத்து வீட்டில் யார் வசிக்கிறார் என்பது கூட தெரியாமல் காலங்கள் போய் கொண்டே இருக்கிறது.சென்று கொண்டே இருக்கும் பாதி வழியில் தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது அப்படியே ஒரு அடி நிலத்திற்கு போய் வந்திருக்கலாமே என தோன்றியது,தவற விட்ட தருணங்களை நினைத்து ஒரு கலக்கத்துடனே சென்று கொண்டிருந்தான் நகரத்தை நோக்கி.

❑